

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 விடை நல்லோரை வைகாசித் திங்கள் 27ம் நாள் (10 -06 -2025 செவ்வாய்க்கிழமை) வெளியீடு +94 21 222 9722



**திருஞானசம்பந்தர் சுவாமிகளின் குருபூசை - வைகாசி மூலம்**
**இம்முறை வைகாசித் திங்கள் 29 ஆம் நாள் (12-06-2025) வியாழக்கிழமை**

# தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயில் ஐந்தாம் ஆண்டு நிறைவு சங்குநீராட்டு















# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# பண்பாட்டுத் தற்கொலை

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

பண்பாடு என்றால் என்ன, பண்பாட்டு விழுமியங்கள் என்றால் என்ன என்பது பற்றி நாங்கள் எப்போதாவது ஆழமாகச் சிந்தித்திருக்கிறோமா என்று எண்ணுமளவிற்கு தமிழர் பண்பாடு இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் மாறிக்கொண்டு வருகிறது. பண்பாடு என்பது மொழியுடன் மட்டும் நின்றுவிடாது, தத்துவம், உணவு, இறை நம்பிக்கை, சடங்குகள், அரசியல், இறையாண்மை, நிலம், வழிபாட்டு முறைமைகள், சமூக மேம்பாடு என்று பல கூறுகளைக் கொண்டது. நாங்கள் இதில் எதாவது ஒன்றுடன் குறிப்பாக மொழி மற்றும் அரசியலுடன் நின்றுகொண்டு மற்றவற்றை தொலைத்து விட்டோமா என்ற எண்ணம் என்மனதில் பல் லாண்டு காலமாக எழவே செய்கின்றது.

பண்பாட்டுக் கூறுகளை ஒவ்வொன்றாக பின்னர் பார்ப் போம். இம்முறை குறிப்பாக சடங்குகள் மற்றும் உணவு முறை என்பதனை பார்ப்போம். அதிலும் குறிப்பாக ஒரு முக்கியமான வாழ்வியல் சடங்கான திருமணச் சடங் கினை உதாரணமாக எடுத்து இதனை ஆராய்வோம். முன்ன ரெல்லாம் திருமணம் என்றால் ஊர்கூடி பலகாரம் சுட்டு, நிறக்கடதாசியை கீற்றுகளாக வெட்டி அலங்காரம் செய்து, முளைப்பாலிகை வைத்து பொன்னுருக்கி, அரசாணைக் கால் என்று முள்முருக்கை நட்டு, பந்தல் கட்டி வாழை நிறுத்தி,வாசலில் கும்பமிட்டு அருகருகே விளக் கிட்டு,வாழைப்பழ சீப்பு வைத்து, திருநீறும் சந்தனமும் குங்கும மும் பன்னீரும் கற்கண்டும் சேர்த்து வைத்து, வருபவருக்கு வணக்கம் சொல்லி பன்னீரிட்டு, கற்கண்டை உமியக் கொடுத்து, பூவினால் பந்தல் கட்டி, மாமன் பால்வைத்து நீராட்டி, சபை கூடி திருமணம் செய்து, கை நனைக்க நீர்ச்செம்பு தான் கொடுத்து, பந்திக்கு பாய் போட்டு, தலை வாழையிலையை முனைப்பக்கம் இடமாக இட்டு, கைக்குத்தரிசி சோறு போட்டு, பயிற்றங்காய் பருப்புடன் நெய்சேர்த்து, பால்சோதியும் மோர் மிளகாயும் சேர்த்து மரவள்ளி பொரியலுடன் படையலிட்டு, வடையும் பாயசமும் இலையில் இட்டு, நாலுபேருக்கு ஒரு செம்பு என்று குடிக்க தண்ணியும் வைத்து, உண்டபின் வெற்றிலை பாக்கு என்று சீர்கொடுத்து சிறப்பாக நடைபெற்றது. வந்தவர் போனவர் எல்லாம் சேலை வேட்டி என்று நிறைவாக பொட்டு டனும் பூவுடனும் நெல்லும் பூவும் கொண்டும் சொல்லும் உள்ளமும் சேர்ந்து நிற்க வாயார மனதாரா வாழ்த்திச் சென்ற னர்.

ஒன்றை மட்டும் ஆழமாக விளங்கவேண்டும், காலங் கள் எத்தனை தான் கடந்தாலும், கடைசி வாழ்வியலில் ஆவது பண்பாடு, தொக்கு நிற்கிறதே என்ற பூரிப்பு எனக்கு எண்பது தொன்னூறுகளில், ஏன் இரண்டாயிரத்திலும் ஆரம்பத் தில் இருந்தது. இந்த சடங்கு வழி பண்பாட்டினைப் பார்த்தா வது இவர்கள் தமிழர்கள் என்ற காலம் இப்ப மாறுகின்றது என்பது தான் வேதனையான உண்மை. மற்றவர்கள் வலிந்து மாற்றமால், நாங்களாகவே பண்பாட்டுத் தற்கொலை செய்கி றோம் என்பது எனது எண்ணம் மட்டுமல்ல சமூகத்தில் காணக்கூடிய உண்மை. திருமணத்திற்கு முன்னர் சங்கீத், மேந்தி என்று வேற்றுப் பண்பாட்டு கலப்புகள், ஆண் பெண் உடைகளின் மாற்றம், தாலி கட்டுதலைத் தவிர எல்லாவற்றிற் கும் ஒப்பந்தகாரர்கள், வளையும் நெகிழித் தட்டில் சாப்பாடு, பயிற்றங்காயும் பருப்பும் போய் பன்னீரும் ரொட்டியும், பாயசம் போய் குளிர்களி, விளங்காத மொழியில் சடங்குகள் (விளங் காதவரைக்கும் தான் நல்லது) என்று எல்லாமே புலம்பெயர் நாடுகளில் மாறிவிட்டன. மண்ணில் பிள்ளையின் திருமணம் எனக்கு நிறைவு என்று இதனை நாட்டிற்கும் கொண்டு சென்று அங்கேயும் இதுதான் கலாச்சாரம் என்று பெருமைப்பட்டு, நாங்களே பண்பாட்டுத் தற்கொலை செய்துகொள்கிறோம்.

தமிழர் பண்பாடு என்பது தற்போது வாழ்வியல் மற்றும் திருக்கோயில் சடங்குகளில் மட்டும் தான் எஞ்சி நிற்கிறது. அதனை மேலும் அழியவிடாது, காப்பாற்றி மேன்மையுறச் செய்ய உலகத்தமிழர் அனைவரும் முன்வரவேண்டும். குறிப் பாக என் சக பெற்றோர்கள் இதனைச் சிந்தித்து செயல்படுவது வரலாற்றுக் கடமையாகும்.



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# தென்னாடு நிறைமதி அறிக்கை

(11-05-2025) – ஒசுத்திரேலியா சிட்னி பரமட்டாவில் செந்தமிழில் விநாயகர் வேள்வி வழிபாடுகள் ஆற்றி வைக்கப்பட்டன. இவ்வழிபாடுகளை தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட முதல்வர் அவர்கள் ஆற்றி வைத்தார். (12-05-2025) – சித்திரை நிறைமதி தென்புலத்தார் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது. அன்றைய தினம் ஐம்பூதநாதருக்கு சிறப்பு வழிபாடுகளும், தென்புலத்தார் திருவடிப்பேறு வழிபாடுகளும் இடம்பெற்றன.

(15-05-2025) – வட மாகாண சபையில் புதிதாக அமையப்பெற்ற அருள்மிகு சொக்கநாதர் திருக்கோயில் சங்குநீராட்டு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. இவ்வழிபாடுகள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால், செந்தமிழில் சிறப்பாக ஆற்றி வைக்கப்பட்டது.

(12-05-2025) – மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள் 29ம் நாள் நிறைமதி அன்று (12-05-2025 திங்கட்கிழமை) ஐம்பத்து ஏழாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற வடமாகாண பிரதம செயலாளர் சிவத்திரு. இலட்சுமணன் இளங்கோவன் ஐயா அவர்கள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் ஐயா அவர்கள், சிற்றி காட்வெயார் முதல்வர் சிவத்திரு.சோமசுந்தரம் பிரகதீஸ்வரன் ஐயா அவர்கள், யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா ஐயா அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் ஐயா அவர்கள் சிவத்திரு. இலட்சுமணன் இளங்கோவன் ஐயா அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென்னாட்டின் ஐம்பத்து ஏழாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்திருந்தார். மேலும் மணிவிழா கண்டு ஓய்வுபெற்றுள்ள சிவத்திரு. இலட்சுமணன் இளங்கோவன் ஐயா அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றிருந்தது. அவருக்கான வாழ்த்துரையை சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் ஐயா அவர்கள் வழங்கி வைத்திருந்தார்.

மேலும் இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக, நடைபெற்று முடிந்த உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்தி, மாவட்ட மட்டத்தில் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் முதல் இடம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன். யமுனானந்தா பிரணவன், இரண்டாம் இடம் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன். யமுனானந்தா சரவணன், வணிகப் பிரிவில் முதல் இடம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன். விஜயசுந்தரம் வருணன், கலைப் பிரிவில் முதல் இடம்பெற்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி. மணிவண்ணன் மயூரா ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

(25-05-2025) – வைகாசித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (06-06-2025) – ஒசுத்திரேலியா சிட்னியில் செந்தமிழில் புதுமனைப் புகுவிழா வழிபாடுகள் ஆற்றி வைக்கப்பட்டன. இவ்வழிபாடுகளை தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட முதல்வர் அவர்கள் ஆற்றி வைத்தார்.

(08-06-2025) – வைகாசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. அன்றைய தினம் எங்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவும், ஐம்பூதநாதர் திருக்கோயில் சங்குநீராட்டு வழிபாடுகளும் இடம்பெற்றன. திருமுறை விண்ணப்ப வழிபாடுகளுடன் சிறப்பாக வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

திருச்சிற்றம்பலம்

# பிரித்தானியாவில் 24ஆவது சைவ மாநாடு

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் (The Federation of Saiva (Hindu) Temples UK) ஒழுங்கமைப்பில், ஆண்டு தோறும் நடைபெறும் சைவ மாநாட்டின் 24ஆவது நிகழ்வு, இவ்வாண்டு 21-06-2025 மற்றும் 22-06-2025 தேதிகளில் பிரித்தானியாவின் இலண்டன் நகரில் விமரிசையாக நடைபெற உள்ளது.

**"திருமுறைகளுக்குப் பின் எழுந்த பத்தி இலக்கியங்கள்"** என்ற தலைப்பில் நடக்கும் இந்த இருதின மாநாடு, சைவ சமயப் பாரம்பரியத்தையும், பத்தி இலக்கிய மரபுகளையும் உலகளவில் பரப்புவதற்கான ஓர் முக்கிய அங்கமாக அமைந்துள்ளது. இம்மாநாட்டிற்கு, திருக்கயிலாய பரம்பரை திருக்கந்த பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம், அருட்குருநாதர் தவத்திரு சீர்வளர்சீர் சிவாக்கர தேசிக சுவாமிகள் அவர்கள், தலைமை தாங்கி நடத்துகின்றார்.

மாநாட்டின் முக்கிய சிறப்பு விருந்தினர்களாக, சிவத்திரு. சா. சண்முக சிவாசாரியார், காளிகாம்பாள் கோயில், சென்னை, தமிழருவி சிவத்திரு. த. சிவகுமாரன், எழுத்தாளர், பேராசிரியர் சிறி. பிரசாந்தன், தமிழ்துறைத் தலைவர், பேராதெனியப் பல்கலைக்கழகம் ஆகியோர் பங்கேற்று உரையாற்ற உள்ளனர். மாநாடு நடைபெறும் இடங்கள், 21-06-2025 சனிக்கிழமை: Shri Kanaga Thurkkai Amman Temple, 5 Chapel Road, London W13 9AE, 22-06-2025 ஞாயிறு: Sri Raja Rajeswary Amman Temple, 4 Dell Lane, Stoneleigh, Epsom KT17 2NE இருநாளும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறும் இம்மாநாட்டில், ஆங்கிலத்தில் இணை அமர்வுகள், இரவு நேர இசைக் கச்சேரிகள், சிறுவர் நிகழ்ச்சிகள் என பல சிறப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பத்தி இலக்கிய மரபுகளைப் பற்றிய ஆழமான உரைகள், கலாசாரப் பரிமாற்றங்கள், இசை, மற்றும் சமய வழிபாட்டு உணர்வுகளை ஒரே மேடையில் கொண்டுவரும் இம்மாநாட்டில், பிரித்தானியாவிலுள்ள சைவக் குடும்பங்கள் மற்றும்




உலகளாவிய சைவர்கள் அனைவரும் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

**திருச்சிற்றம்பலம்**

**தொடர்பு விபரங்கள்:**
**+44 738 472 7711, +44 788 600 3076**
**admin@saivafederation-uk.org**

# பண்டாரவளையில் பன்னிரு திருமுறைகள் அருளாசியுரை



பண்டாரவளை அருள்மிகு சிவசுப்பிரமணிய திருக்கோயில் நிர்வாக சபையினரதும் இந்து பரிபாலன சங்கத்தினரதும் ஏற்பாட்டில், கடந்த 01-06-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 2.00 மணி வரை திருக்கோயில் இந்து கலாசார மண்டபத்தில் பன்னிரு திருமுறைகள் அருளாசியுரை விழா நடைபெற்றது.

இப் பன்னிரு திருமுறைகள் அருளாசியுரை நிகழ்வை திருக்கயிலாய பரம்பரை திருக்கந்த பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம், அருட்குருநாதர் தவத்திரு சீர்வளர்சீர் சிவாக்கர தேசிக சுவாமிகள் அவர்கள் சிறப்பாக நிகழ்த்தி பத்தர்களுக்கு அருளாசி வழங்கினார்.

இந்நிகழ்வில் பதுளை மாவட்டத்தில் உள்ள பசறை, லுணுகலை, ஹாலி எல, எல்ல, வெலிமடை, ஊவாபரணகம, அப்புத்தளை, பண்டாரவளை மற்றும் பதுளை ஆகிய பிரதேசங்களில் இயங்கி வருகின்ற அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பண்டாரவளை அடியார்கள், வணிக முதல்வர்கள், இந்து சமய ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**திருச்சிற்றம்பலம்**

# நல்லூரில் அசைவ உணவகத்திற்கு எதிராக சைவ எழுச்சி!



யாழ்ப்பாணத்தின் சைவத் தலைமை பீடமான நல்லூர் கந்தசுவாமி திருக்கோயில் முன்றலில் பன்னாட்டு முதலீட்டு நிறுவனத்தின் அசைவ உணவகம் திறக்கப்பட்டமை, எமது சைவ மரபுக்கும் தமிழ்ச் சமூகத்தின் கலாச்சார அடையாளங்களுக்கும் எதிரான செயலாக பரவலாகக் கண்டிக்கப்பட்டது. இத்தகைய செயல் நம் புனிதத் திருத்தலங்களின் தூய்மையும், ஆன்மிகச் சிறப்பையும் சீர்குலைக்கும் வகையில் அமைந்திருந்தது.

அந்த வகையில், அந்த உணவகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, தவத்திரு வேலன் சுவாமிகள், சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், நல்லைக்கந்தன் அடியவர்கள், அரசியல் மற்றும் சமூக பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் என பலரும் இணைந்து கடந்த **20-05-2025** அன்று, நல்லூரில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். நல்லைக்கந்தன் கோயில் முன்றலில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம், யாழ் மாநகர சபை அலுவலகம் மற்றும் குறித்த அசைவ உணவகத்துக்கு முன்னிலையாக விரிவடைந்தது.

போராட்டத்தின்போது மாநகரசபை ஆணையாளரை நேரில் சந்தித்தபோது, இவ்வணிகம் எந்தவொரு சட்ட அனுமதியுமின்றி துவங்கப்பட்டுள்ளதாகவும், அதன் பிறகே அனுமதிக்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், உணவகம் திறக்கப்படும் வரை அதை மூடும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் அதனை மீறி உணவகம் தொடர்ந்து இயங்கிவருவதால், அதற்கெதிராக நாளையதினம் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் எனவும் கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மே **24, 2025** சனிக்கிழமை, வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அவர்களை, நல்லை சிவகுரு ஆதீனம் தவத்திரு வேலன் சுவாமிகள், அகில இலங்கை சைவ அர்ச்சகர் சபை, சைவ பரிபாலன சபை, சைவ மகா சபை, சைவ வித்யா விருத்தி சங்கம், இலங்கை சைவ சமய பேரவை மற்றும் யாழ் பல்கலைக்கழகத்தினர் உள்ளிட்ட சைவ அமைப்புகளின் பிரதிநிதிகள் சந்தித்து மனுவொன்றை வழங்கினர்.

**அவர்கள் மனுவில் முன்வைத்த முக்கிய கோரிக்கைகள்:**

- **நல்லூரில் இயங்கும் சட்டவிரோத அசைவ உணவகத்தை மூடுதல்**
- **மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்பாக விசாரணைக் குழு அமைத்தல்**
- **திருத்தல சுற்றுவட்டாரங்களில் அசைவம், மதுபானம் தடை செய்யப்பட வேண்டும்**
- **அறநெறிக் கல்வியை கட்டாயமாக்குதல். குறிப்பாக 14 வயதுக்கு உட்பட்டோருக்கான வெள்ளி மாலை மற்றும் ஞாயிறு மதியம் ஆகிய நேரங்களில், தனியார் கல்வி வகுப்புகள் இடைநிறுத்தப்படவேண்டும்.**
- **மாணவர்கள் சைவச் சின்னங்களை அணிந்து பாடசாலைக்கு செல்லும் உரிமையை உறுதி செய்தல்**

இந்தக் கோரிக்கைகள் குறித்து ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள், **“சைவ சமுதாயத்தின் மரபும் உணர்வுகளும் பாதுகாக்கப்படும். உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்”** என உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நல்லைக்கந்தப்பெருமான் திருவருளால், இப்போராட்டம் சைவ மரபைப் பாதுகாக்கும் வரலாற்றுப் பொற்கல்லாக நிலைத்து நிற்கும் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் விதைத்துள்ளது.

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவும் ஐம்பூதநாதர் சங்குநீராட்டும்



பஃறுளி ஆற்றுடன், பன்மலை அடுக்குடன், முதற் சங்கம் கண்ட தென்புலத்தார் நினைவாக, ஆதித்தமிழர்கள் வாழ்ந்த தென்னாட்டில், உலகில் வேறெங்கும் காணாத வகையில், ஐம்பூதங்களுக்கும் சேர்த்து ஒரு தலக்கோயிலாக தென்னாட்டில், சிவபூமி என்றழைக்கப்பெறும் இலங்கை யாழ்ப்பாண மாநகரில் கொக்குவில் **'தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடம்'** அமைகிறது.

அங்கே ஐம்பூதநாதர் அருட்கோலம் கொண்டு எழுந்தருளுகிறார், எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய சிவன், இப் புத்தெழில் கோலத்தில் புத்தெழுச்சி பெற்று செந்தமிழ் ஆகம சிவமடம் என்ற பெயரில் அப்பெயரிற்கேற்றால் போல் செந்தமிழ் ஆகம முறைப்படி செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் ஆற்றிட ஐம்பூதநாதருக்கு வீறியெழல் (சார்வரி) ஆண்டு விடைத் திங்கள் (வைகாசி) 21 ஆம் நாள் (03-06-2020) புதனன்று விளக்கு (சுவாதி) நாண்மீன், பதின்மும்மைப் பிறைநாள் (திரயோதசி திதி - மூன்றாம் வளர்பிறை) அமுத ஓகம் காலை 9 மணிக்குமேல் 10 மணிக்குள்ளாக விடை வான் வேளையில் வெள்ளி நல்லோரையில் கடவுள் மங்கல நன்னீராட்டு நடைபெற்று, தென்னாட்டின் சிவப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு தொடங்கி இன்று வரை தன்னிலைமாறாது செந்தமிழில், நிறைமதி, மறைமதி வழிபாடுகள், கழுவாய் வழிபாடுகள், குருபூசைகள், சிவமங்கல நீராட்டுகள், திருக்குட நன்னீராட்டுகள், வாழ்வியல் சடங்குகள் என்பவற்றை நடாத்தி வருகின்றது. அந்தவகையில், அருள்மிகு மனோன்மணியம்மை உடனுறை ஐம்பூதநாதப் பெருமான் திருநிலைப்படுத்தப்பட்டு, ஐந்து ஆண்டு நிறைவாகி உள்ள நிலையில், கடந்த வைகாசித் திங்கள் இருபத்தைந்தாம் நாள் (08-06-2025) அன்று ஐம்பூதநாதப் பெருமானுக்கு சங்கு நீராட்டு வழிபாடுகள் மிகவும் சிறப்பாக இறையருளோடு நடந்தேறியுள்ளது.

**பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி**
**அருக்கனில் சோதி அமைத்தாய் போற்றி**
**வெண்மதி தண்ணொளி தந்தாய் போற்றி**
**உயிருக்குள் உயிராய் நின்றாய் போற்றி**
**ஆதியும் அந்தமும் இல்லாய் போற்றி**
**ஐம்பூதநாதரே போற்றி போற்றி**





# வடமாகாண சபை சொக்கநாதர் திருக்கோயில் சங்குநீராட்டு



வடமாகாண சபை வளாகத்தில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு சொக்கநாதர் திருக்கோயில், கடவுள் மங்கல நன்னீராட்டு பெருவிழா கடந்த சித்திரைத் திங்கள் 21ஆம் நாள் (04-05-2025) ஞாயிற்றுக்கிழமையன்று, தெய்வத்தமிழில்சிறப்பாகநடைபெற்றுமுடிந்திருந்தது. அதனைத்தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்று, கடந்த வைகாசித் திங்கள் 1ம் நாள் (18-05-2025) வியாழக்கிழமை அன்று இடம்பெற்றிருந்தது.

இவ்வழிபாடுகள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால் செந்தமிழ் மந்திரங்கள் ஓதி சிறப்பாக ஆற்றி வைக்கப்பட்டன. இவ்வழிபாட்டில் வடமாகாண சபை உத்தியோகத்தர்களுடன் அடியார்கள் பலரும் கலந்து கொண்டு, சொக்கநாதப் பெருமானுக்கு சங்குநீர் ஊற்றி வழிபட்டனர்.

**திருச்சிற்றம்பலம்**

---

# உயர்தரத்தில் யாழில் மாவட்ட முன்னிலைபெற்ற மாணவர்களுக்கு தென்னாட்டில் கௌரவிப்பு



செல்வன். யமுனானந்தா பிரணவன்
(உயிரியல் பிரிவு - 1 ஆம் இடம்)



செல்வன். யமுனானந்தா சரவணன்
(உயிரியல் பிரிவு - 2 ஆம் இடம் )



செல்வன். விஜயசுந்தரம் வருணன்
(வணிகப் பிரிவு - 1 ஆம் இடம் )



செல்வி. மணிவண்ணன் மயூரா
(கலைப் பிரிவு - 1 ஆம் இடம் )

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால், ஒவ்வொரு வருடமும் கா.பொ.த உயர்தரம் மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகளில் மாவட்ட மட்டத்தில் முன்னிலை பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை கௌரவித்து வருகின்றோம். அந்தவகையில் இம்முறை 2024 ஆம் ஆண்டு கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட முன்னிலை பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு, கடந்த 12-05-2025 திங்கட்கிழமை அன்று, ஐம்பத்து ஏழாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் முதல் இடம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன். யமுனானந்தா பிரணவன், இரண்டாம் இடம் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன். யமுனானந்தா சரவணன், வணிகப் பிரிவில் முதல் இடம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன். விஜயசுந்தரம் வருணன், கலைப் பிரிவில் முதல் இடம்பெற்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி. மணிவண்ணன் மயூரா ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

**திருச்சிற்றம்பலம்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**சைவாலய வழிபாட்டில் சண்டேசுவரப்பெருமானின் சிறப்பிடம் எவ்வாறு விளங்குகின்றது?**

சண்டேசுவரப்பெருமான் வழிபாடு குறித்து இருக்கு முதலிய வேதங்களில் கூறப்படவில்லை என்பது சிவாசாரியச் சான்றோர்களின் கருத்து. இதனால், சிவாகமத்திற்கே உரிய சிறப்பான வழிபாடுகளில் சண்டேசுவரப்பெருமான் வழிபாடு தனித்துவம் உடையதாக விளங்குகின்றது.

**சண்டனை அர்ச்சித்தவரே சம்புவை அர்ச்சித்த பலம்**
**கொண்டிடுவர் மற்றையர் கொள்ளார் - சைவசமயநெறி**
**(குறள் 556)**

சண்டேசுவரப்பெருமானை வழிபட்டோரே, சிவபெருமானை வழிபட்ட பலனைப் பெறுவர். ஏனையோர் பெறமாட்டார் என்பது சிதம்பரம் மறைஞானசம்பந்தர் எழுதிய சைவசமயநெறி என்னும் நூலின்கண் விளங்கும் குறளால் இனிது விளங்கும். உத்தர காமிக ஆகமம் 65ஆம் படலத்தில் சண்டேச ஸ்தாபன முறை கூறப்பட்டுள்ளது. **“சண்டேசுவரப்பெருமானுக்கு என்று எது தீர்மானிக்கப்பட்டதோ, சிவபெருமானுக்கு நிவேதிக்கப்பட்டதோ அந்த நைவேத்தியம் முதலியவைகளை பூசையின் முடிவில் சண்டேசுவரப்பெருமானுக்கு நிவேதிக்க வேண்டும்”** என்று மேற்படி சிவாகமப்படலத்தில் 87ஆம் சுலோகத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாகமத்தில், சண்டேசுவரப்பெருமானுக்கு பரிவாரங்களும் கூறப்பட்டு, கொடிமராதி தனிக்கோயிலுக்குரிய விதிகளும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. **“நிர்மால்யங்களையும் அலங்கார நகைகளையும் அஸ்திர மந்திரத்தின் மூலம் கலைத்து, சண்டேசுவருக்கு அவருடைய மூலமந்திரத்தால் சமர்ப்பிக்கவேண்டும்”** என்று இரௌரவாகமம் 19ஆம் படலத்தில் கூறப்பட்டுள்ளது.

கொடியேற்றத்தின்போது சிவபெருமானுக்குப் பதிலாகச் சண்டேசுவரப்பெருமானை பாட்டு நடனம் இன்னிசை வாத்தியங்களுடன் அழைத்து வந்து கொடியேற்றத்தைச் செய்யலாம் என்று அஜிதாகமம் கிரியாபாதம் 27ஆம் படலத்தில் கூறப்பட்டுள்ளது. சிவாலயக் கொடியிறக்கமானது சண்டேசுவரப்பூசையுடன் மேற்கொள்ளப்பட்ட வேண்டும் என்றும் அஜிதாகமத்தின் கிரியாபாதம் 27ஆம் படலத்தில் விதிக்கப்பட்டுள்ளது. சண்டயாகம் என்று இப்பூசை கூறப்பட்டுள்ளது. கொடியிறக்கக் கிரியைகளின் ஆரம்பக் கிரியைகளில் அர்ச்சனை அபிடேகாதி பூசைகள் சண்டேசுவரப்பெருமானுக்கு கூறப்பட்டுள்ளது. இக்கிரியையே சண்டயாகம் எனப்படும். இச்சண்டேசுவரப்பூசையை முடித்தே கொடியிறக்கம் அஜிதாகமத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

சிவபூசைப் பலனைக் கொடுக்கும் உரிமையைச் சண்டேசுவரர் பெருமானுக்குச் சிவபெருமானே வழங்கியருளினார் என்று சிவமகாபுராணம் கைலாசசம்கிதையில் கூறப்பட்டுள்ளது.

**அண்டர் பிரானும் தொண்டர்தமக் கதிபன் ஆக்கி அனைத்துநாம்**
**உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக்காகச்**
**சண்டீ சனுமாம் பதந்தந்தோமஎன்றங் கவர்பொற் றடமுடிக்குத்**
**துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்**
**- பெரியபுராணம்**

தெய்வச்சேக்கிழார் பெருமானும் விசாரசருமருக்குச் சண்டேசுவரர் பதவியைச் சிவபெருமான் கொடுத்தருளும் போது சிவபெருமான் வாக்காகவே சண்டேசுவர நாயனார் புராணத்தில் சண்டேசுவரப் பதவியின் அருமையை உணர்த்தியருளுகின்றார். மேலும், முதலாம் திருமுறையில் இருந்து பன்னிரண்டாம் திருமுறை வரை ஒவ்வொரு திருமுறையிலும் சண்டேசுவர நாயனார் போற்றப்பட்டுள்ளார்.

சிவாலயச் சொத்துக்களைப் ஆளும் உரித்து சண்டேசுவரப்பெருமானுக்கே உரித்தென்பதனால், சிவாலயக் கணக்குகள் கொடுக்கல் வாங்கல்கள் யாவும் சண்டேசுவரப்பெருமான் பெயரால் செய்யும் மரபும் விளங்கியுள்ளது. இவ்வாறு சண்டேசுவரப்பெருமான் பெயரால் செய்யப்படும் திருக்கோயில் கொடுக்கல் வாங்கல் யாவும் **“சண்டீசப்பெருவிலை”** எனப்பட்டது.

**சண்டீச்சுரன் ஓலை சாகரஞ்சூழ் வையத்தீர்**
**சண்டீச் சுரன்கருமம் ஆராய்க - பண்டே**
**அறஞ்செய்தான் அறங் காத்தான் பாதம்**
**திறம்பாமைச் சென்னி மேல் வைத்து**
**- பண்டைய திருக்கோயில்கள் சிலவற்றில் காணப்படும் கல்வெட்டுப் பாடல்**

மதுராந்தகம் வட்டம் பெரும்பேறு தான் தோன்றீச்சரர் திருக்கோயில், தஞ்சை வட்டம் திருக்களாவுடைய மகாதேவர் திருக்கோயில், விழுப்புரம் திருவாமாத்தூர் திருக்கோயில், புதுக்கோட்டை திருமெய்யம் கள்ளம்பட்டி திருக்கோயில் என்பவற்றில் இப்பாடல் கல்வெட்டாகக் காணப்படுகின்றது.

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## கி.மு 300ஆம் ஆண்டில் வாழ்ந்த தமிழர் வரலாற்றுடன் தொடர்புடைய வெல்லாவெளி கோயில்தீவு சிவன் கோயில்




சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு




**மேதிதோய் குளங்களெல்லாம் வீரப்போர் வரால்மீன் பாயும்**
**ஓதிதோய் மலர்களெல்லாம் ஒலிப்பன மாதர் கண்கள்**
**நீதிதோய் வன்னிமைக்கு நிகரில்நா தணநா டென்பர்**
**வீதி தோய் வெல்லவூராம் விழுமிய சரிதம் கேளீர்**
**- மண்டூர் மு. சோமசுந்தரம்பிள்ளைபுலவர் - (1964)**

மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசங்களில் பண்டைய வரலாறுகளுடனும், பல தொல்லியல் எச்சங்களுடனும், நாட்டார் கலைவடிவங்கள், நாட்டுப்புறவழிபாடுகள் என்பவற்றுடன் இயற்கை எழில் பொழியும் வாவி ஆறைத் தொட்ட ஆறும், சதுப்பு நிலங்களும், மேய்ச்சல் நிலங்களும் மலைப்பாறைகளும், ஆயிரம் விழுதுகள் தாங்கிய ஆலமரமும், காடுகளும், வயல் வெளிகளும், எருமைகளும் பசுக்களும், கோயில்களும், குடியிருப்புக்களும் ஒருமித்து மருதம், முல்லை, குறிஞ்சியென்ற மூவகை நில அமைப்புக்களை இயற்கையாகக் காட்டி நிற்கும் அழகிய இடம் வெல்லாவெளிப்பிரதேசமாகும்.

இப்பிரதேசம் மட்டு மாநகரின் தெற்கு நோக்கி சுமார் 33 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. களுவாஞ்சிக்குடியிலிருந்து பட்டிருப்பு பாலத்தினை ஊடறுத்து கோயில் போரைதீவு ஊரின் ஊடாகச் சென்றடையலாம். வெல்லாவெளிப் பிரதேசம் அம்மன்குளம், நாதனை, கோயில்தீவு, குளத்து வட்டை என்னும் நான்கு சிறுசிறுகுடிசனங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இதில் கோயில்தீவில் இருந்த சிவனாலயமே மிகப்புராதனமானது. போர்த்துக்கீசர் காலத்தில் அழிக்கப்பட்டு இறந்த நிலையில் ஓர் சில சுவடுகளைத் தாங்கி நிற்கும் ஆலயமாகத் திகழ்கின்றது.

### வெல்லாவெளியின் வரலாறு

வெல்லாவெளி பிரதேசத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் எனும் நூலும், நகரம் எழுதிய கல் என்று இக்கிராமவாசிகளால் அழைக்கப்படும் குடைவரைக் கல்வெட்டும் முதன்மையும் முக்கியத்துவமும் பெறுகின்றது.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தை மூலமாகக் கொண்டு ஆராயும் பொழுது கி.பி 11 ஆம் நூற்றாண்டில் **'நாதனை"** எனும் பெயரால் அழைக்கப்பட்டமை பதிவாகியுள்ளது. மட்டக்களப்பின் ஆட்சியாளனாக இருந்த மதிசுதன் வரலாற்றில் இவ்விடயம் வருகின்றது. கி.பி 13 ஆம் நூற்றாண்டில் மாகோன் ஆட்சிக் காலத்தில் (1215 - 1255) உருவாக்கப்பட்ட நாடுகாடுப்பற்றின் வடக்கு எல்லையாக நாதனை குறிப்பிடப்பட்டுள்ளது. போர்த்துக்கீசர் காலத்தில் முதன் முதலில் தயாரிக்கப்பட்ட தோம்பு எனப்படும் காணிப்பதிவேட்டில் நாதனை வேலா வெளிக் கண்டம் என்று பதிவு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து அதன் பின் வந்த ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் தங்களது ஆவணப் பதிவேட்டில் வேலாவெளியை வெல்லா வெளி எனக் குறிப்பிட்ட காலம் முதல் அப்பெயரே இப்பிரதேசத்திற்கு நடைமுறையில் வந்தது.

ஒரு சமூகத்தின் பண்டைய இருப்பை அறிய உதவும் தொல்லியல் சான்றுகளில் கல்வெட்டும் ஒன்றாகும். வெல்லா வெளியின் மலையொன்றிலும், பெருங்கற்பாறையொன்றிலுள்ள குகையொன்றிலும் இரு சாசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றின் ஒன்றிலே 'பறுமகன் ஸமுத' என்று எழுதப்பட்டுள்ளது. இதை ஆராய்ந்த வரலாற்றுப் பெருந்தகை சி.பத்மநாதன் அவர்களும், இந்திய நாட்டைச் சேர்ந்த வரலாற்றுப் பேராசிரியர்களும். இலங்கைப் பிராமிச் சாசனங்களில் கையாளப்படும் இச் சொல் தமிழ் சொல்லின் மாற்று வடிவம் என்று குறிப்பிடுவதோடு, இற்றைக்கு 2100 ஆண்டுகளுக்கு முன்னர் வெல்லாவெளியிலே தமிழ் மொழி வழங்கியமைக்கு அது ஆதாரமாகின்றது என்று குறிப்பிடுகின்றனர். இருப்பினும் இக் கல்வெட்டின் காலம் கி.மு 300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் இலங்கைத் தமிழர் வரலாறு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆக வெல்லா வெளிப் பிரதேசம் ஈழத் தமிழரின் ஆதிக் குடியிருப்பை ஆணித்தரமாக உறுதிப்படுத்தியுள்ளமையை கவனிக்க முடிகின்றது.

### கோயில் தீவு சிவன் கோயில்

கோயில்தீவு என்பது வெல்லாவெளிப் பிரதேசத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள கிராமமாகும். இங்குதான் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட புராதன சிவன் கோயில் அமைந்திருந்தது. நாதனைக்குப் பிற்பட்ட குடியேற்ற கிராமமாக கோயில்தீவு அமைந்திருந்தாலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களோடு விளங்கி இன்று மறைந்து விட்ட சிவன் கோயிலாகி விட்டது. ஆனால் இன்றும் இக்கோயில் அமைந்திருந்த காணியை கோயில்வளவு என்றே அழைக்கின்றனர். இக் கோயிலில் அருள்பாலித்த மூலமூர்த்தி சோமசுந்தரர் எனும் பெயரால் போற்றப்பட்டுள்ளார். ஊரின் கிழக்குப் புறமாக உச்சந்தீவு என்னும் வயல்பரப்பைத் தொட்டதாக அமையும் வாவித் தொடுகையை இத்தலத்தின் தீர்த்தமாகக் கொண்டுள்ளனர். இன்றும் உச்சந்தீவு தீர்த்தக் கரையும் சோம சுந்தர் இறக்கத்தடியும் என்று இக் கிராமவாசிகள் அழைத்தும் வருகின்றனர்.



இவ்வாலயத்தின் வரலாற்றினை நோக்கும் போது, போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட இச்சிவன் கோயில் குறித்த இருப்பிடச் சான்றைத் தவிர வேறு எந்த இலக்கியச் சான்றுகளும் கையில் இன்று வரை கிட்டவில்லை. ஆதலால் தொல்லியல் நோக்கிலேயே இவ்வாலய இருப்பைத் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட சிவன் கோயிலின், கருங்கல்லினால் செதுக்கப்பட்ட கதவு நிலைகள் வெல்லா வெளிப் பிள்ளையார் கோயிலில் பொருத்தப்பட்டு இருப்பதனை அவதானிக்கலாம். அத்துடன் பரந்த பீடக் கல், ஆசனக்கல், கோயில் வளவின் தென்கிழக்கு மூலையில் அழியாடுற்றுக் கிடக்கும் பெரியமரக் கொட்டு பதித்து சுற்றி வரச் சதுர அமைப்பில் கட்டப்பட்டிருந்த தீர்த்தக்கிணறு அண்மையில் இவ்விடத்தில் தொலைத் தொடர்பு கோபுரம் நிறுவுவதற்காக நிலத்தை அகழ்ந்த போது நிலத்தின் அடியில் இருந்து கிடைத்த சிதைந்த பல கற்தூண்டங்கள் என்பன கோயில் தீவில் ஒரு சிவன் கோயில் இருந்தமைக்கான தடயங்களாக எடுத்துக் கொள்ளமுடியும்.

இச் சிவன் கோயிலோடு தொடர்புடைய செவிவழிக்கதையொன்றும் இவ்வூர் மக்களிடையே காலம்காலமாக நிலவி வருகின்றது. போர்த்துக்கீசர் கோயில்களைக் கொள்ளையிட்டும் அழித்தும் வந்த போது இக்கோயிலின் பெறுமதியான பொருட்களையும், சிலைகளையும் கிடாரம் ஒன்றில் இட்டு சிவன் கோயிலுக்கு நேராக உள்ள நாதனை ஆறு எனும் பூவல் ஆற்றில் போட்டதாகவும் அதை யாரும் எடுக்கக் கூடாது என்ற காரணத்தினால், அவற்றைப் பூதம் காவல் செய்வதாக வதந்தியும் பரப்பப்பட்டதனால் அவ்வாற்றில் எவரும் துணிந்து இறங்குவதில்லை என்றும் கூறப்பட்டு வருகின்றது. இவ்விடத்தை இன்று 'கிடாரம் போட்ட பள்ளம்' என்றும் அழைத்து வருகின்றனர்.

இலங்கையில் உள்ள பழமை சிவன்கொயில்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு வரும் திரு.என். கே. எஸ் திருச்செல்வம் அவர்கள் வெல்லாவெளி கோயில்தீவு சிவன் கோயில் பற்றி ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் (29.04.2012, 05,05,2018) எழுதியதன் சில முக்கிய பகுதிகள் வருமாறு.

**"பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டுச் சிறப்புடன் விளங்கிய சிவன் கோயில் இங்கு அமைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. இராச மலை எனப்படும் றஜகலப் பகுதியிலிருந்து கிழக்கு நோக்கி ஓடும் சிற்றாறுகள் இரண்டும் ஒன்று சேர்ந்து நாதனை ஆறு என்ற பெயரில் மட்டக்களப்பு வாவியில் கலக்கும் சங்கமத்திற்கு சற்றுத் தூரமாக இச்சிவன் கோயில் அமைந்திருந்தது. மிகப்பழங்காலத்தில் இங்கு சிவ வழிபாடு நிலவியுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த கொங்கண முனிவர் இலங்கைக்கு தலயாத்திரை வரும் போது தான் கொண்டு வந்த லிங்கங்களில் ஒன்றை இப்பகுதியில் வைத்து பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்ததாகவும், இப்பகுதியில் வாழ்ந்த ஆதிவேடர் குலத்தவரால் தொடர்ந்து இந்த லிங்கம் பூசிக்கப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகின்றது. கி.பி 10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 13 ஆம் நூற்றாண்டு வரையான காலங்களில் சிறப்புற்றிருந்த ஆலயங்களில் இதுவும் ஒன்று. பூபால கோத்திர வன்னிமைகளின் ஆட்சிக்குட்பட்டிருந்த இப்பகுதியில் அவர்களாலும் இவ்வாலயம் பரிபாலிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. மட்டக்களப்புத் தமிழகத்திலிருந்த ஏராளமான இந்து ஆலயங்கள் ஐரோப்பியர் காலத்தில் அழிக்கப்பட்டன. இவற்றில் கோயில்தீவு சிவன் கோயிலும் ஒன்றாகும்."**

இதே போல் இவ்வாலயத்தின் இருப்பு தொடர்பான தேடல்களை வெல்லாவெளியைச் சேர்ந்த கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்கள் **"வெல்லா வெளி வரலாறும் பண்பாடும்"** என்ற நூலில் பதிவு செய்துள்ளார். மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இளம் வரலாற்றுத் துறை விரிவுரையாளர் நிலாத்தி பொன்னுத்துரை அவர்களும் **"வெல்லா வெளிக்கிராமத்தின் வரலாறும் தொல்லியல் எச்சங்களை ஆவணப்படுத்தலும்"** என்ற கட்டுரையில் இக்கோயிலின் வரலாற்றை ஆழப்பதிவு செய்துள்ளார். தற்போது இவைகளெல்லாம் இக்கோயிலைப் பற்றி அறிந்து கொள்ளக் கூடிய இலக்கிய ஆதாரங்களாகும்.

கிழக்கிலங்கையில் கலிங்கமாகோனின் செல்வாக்கு மேலோங்கிய காலகட்டத்தில் கொக்கட்டிச்சோலை, மண்முனை, ஆரையம்பதி, கோயில் போரைதீவு, திருக்கோயில் ஆகிய இடங்களில் அமைந்துள்ள கோயில்களில் வீராகமச் செல்வாக்கும், வீரசைவபக்திமரபுகளும், கோயில் தொண்டூழியமுறைகளும்குடிவழக்கு மரபுகளும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இன்றளவும் கொக்கட்டிச் சோலை சிவன் கோயில் வீரசைவ மரபுகளைத் தழுவியே நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில்



மாகோன் காலத்திற்குட்பட்ட வெல்லாவெளி கோயில்தீவு சிவன் கோயிலிலும் வீரசைவ நெறிதழைத்தோங்கியிருக்க வேண்டும். இதனை தற்கால வெல்லாவெளி கிராம மக்களின் சமயப்பண்பாட்டு அம்சங்களினுடாக அவதானித்துக் கொள்ளலாம்.

எது எவ்வாறாயினும் சிதைந்த சிவாலயங்களை மீள கட்டியெடுப்பது சிவபுண்ணியமாகும். புராதன சோமசுந்தரப் பெருமானின் திருவருள் மீண்டும் வெல்லாவெளி மண்ணின் கோயில்தீவில் நிலை கொள்ள இப்பிரதேசத்தாரின் மனத்திலும், வாக்கிலும், செயலிலும் எம்பெருமானின் திருவருள் கைகூட வேண்டும்.

**ஊர் பரந்த உலகின் முதல் ஆகிய ஓர் ஊர் இது - என்னப்**
**பேர் பரந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் - இவன் அன்றே**
**-சம்பந்தர் தேவாரம்**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்

**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

### திருப்பனையூரில் திருநடனக் கோல அருட்காட்சி

திருப்புகலூர் இறைவன் அருளால், சேவடி நயந்த சுந்தரமூர்த்தி நாயனார், அங்கிருந்து செம்பொன் கட்டிகளை ஈன்றெடுத்துப் பெற்ற பின்னர், பத்தியராயப் பரிசனங்களோடு புறப்படும் போது, இறைவன் வழி நடத்தும் புனித யாத்திரையாக திருப்பனையூரை நோக்கிச் செல்லும் வரலாறு தோன்றுகிறது. இந்த வழியில் காவிரியின் தென்கரையில் எழுந்தருளும் திருப்பனையூர்த் திருத்தலத்திற்குச் சுந்தரர் வருகைதந்த நிகழ்வும், அங்கு இறைவனார் அவர்முன் திருக்கூத்துக் கோலத்துடன் எழுந்தருளிய நிகழ்வும் சைவ மரபில் சிறப்புடையதாகும்.

**"பதிகம் பாடித் திருக்கடைக்காப்பணிந்து பரவிப் புறம்போந்தே
எதிரில்இன்பம் இம்மையே தருவார் அருள் பெற்றெழுந்தருளி
நிதியின் குவையும் உடன்கொண்டு நிறையும் நதியும் குறைமதியும்
பொதியும் சடையார் திருப்பனையூர் புகுவார் புரிநூல் மணிமார்பர்"**
**- (ஏயர்கோன் கலிக்காமர் - திருப்பாடல் 52)**

இங்கு, சுந்தரர் வழிபாடு நிறைந்த மனமுடன் திருக்கடைக் காப்பணிந்து புறப்படும்பொழுது, நிதியரசர் போலவே இறைவனின் அருள் பெற்றுச் செல்வம் பொலிவோடு பயணிக்கும் அவரைப் பின்தொடரும் திருவிளக்காகக் கூறப்படுகிறது. அவரும், உணர்வின் உச்சத்துடன் திருப்பனையூரைப் புகுகின்றார். சுந்தரர் அப்புறமாகிய பின்பே, அந்த நன்மருங்கினில், திருப்பனையூர் தேவன் சிவபெருமான், தன்னுடைய அற்புத திருக்கூத்துக் கோலத்தோடு அவருக்கெதிர் காட்சியளிக்கின்றார்.

**"செய்ய சடையார் திருப்பனையூர்ப் புறத்துத் திருக்கூத்தொடும் காட்சி
எய்த அருள எதிர் சென்றங்கெழுந்த விருப்பால் விழுந்திறைஞ்சி
ஐயர் தம்மை அரங்காடவல்லார் அவரே அழகியரென்று
உய்ய உலகு பெறும்பதிகம் பாடி அருள் பெற்றுடன் போந்தார்"**
**- (ஏயர்கோன் கலிக்காமர் - திருப்பாடல் 53)**

இறைவனின் அருள் என்பது, பத்தனின் உள்ளுருக் கூப்பிடலுக்கு பதிலாக எழும் தெய்வச் செயல். சுந்தரர் மனம் கொண்ட விருப்பத்தின் பயனாகவே, இறைவன் ஆடல் அருளால் அவரை முன்னின்று காட்சியளிக்கின்றார். இக்காட்சியை **'அழகு', 'தாண்டவம்', 'இன்பம்', 'அருள்'** எனச் சில சொற்கள் மட்டுமே விவரிக்கமுடியும் ஆனால் உணர்வுகள் அளவுக்கிடமின்றி பெருகுகின்றன. இந்த அருளால் அமிழ்த முற்ற சுந்தரர், அதே இடத்தில் **"அவரே அழகியரே!"** என வியப்போடு ஆனந்தக் கண்களால் ஏந்திய பதிகத்தைப் பாடுகிறார்.

**"மாட மாளிகை கோபுரத்தொடு மண்டபம் வளரும் வளர்பொழில்
பாடல் வண்டறையும் பழனத் திருப்பனையூர்த்
தோடு பெய்தொரு காதினில் குழை தூங்கத் தொண்டர்கள் துள்ளிப் பாடநின்று
ஆடுமாறு வல்லார் அவரே அழகியரே"**
**- (சுந்தரர் தேவாரம் - திருப்பனையூர் - பதிகம் 1)**

இங்கு, பெருமான் திருமுடியில் பிறைமதி, சடையில் கங்கை, கைகளில் அறுஅங்கியமும், செவிகளில் சின்னமும், மேனியில் திருநீறும் ஒளிர - இவ்வளவு ஒளியிலும், அவரின் நடனமயமான அன்புப் பேதைகளும் ஒன்றிணைந்து சிறப்பியக்கி உரைத்துச் செல்வது: **"ஆடுமாறு வல்லார் அவரே அழகியரே!"**. இது பத்தருக்கு மட்டுமின்றி, **"சிவக்காட்சி"** யென்றொரு பரவுயிர் அனுபவத்தைத் தரும் பேருரை.




திருப்பனையூரில் நிகழ்ந்த இந்த அருள்காட்சி, இறைவன் பத்தனின் விருப்பத்துக்கு எப்படி நேரடியாக மாறுகிறான் என்பதை எடுத்தியம்புகிறது. சுந்தரரின் நெஞ்சகக் காதலுக்குப் பதிலாக, நடனக் கோலத்துடன் காட்சியளித்தல் என்பது, சைவம் சுரக்கும் அழகு, பத்திக்கும் இறைவனுக்கும் இடையிலான ஈர்ப்பு என்பவற்றைக் காட்டும் உச்சநிலை.

### திருவீழிமிழலைக்கு நடைக்காவண வரவேற்பு

திருவாரூரின் மேற்குப் பகுதியிலே, புனிதமான நன்னிலம் என்ற திருத்தலத்தில், மதுவனேசுவரர் எழுந்தருளியுள்ளார். இத்தலத்தில் இறைவனை வணங்கி, ஒரு திருமடத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் தங்கியிருந்த காலம்.திருவீழி மிழலை வாழ் அந்தணர்கள், வீழிமிழலையிலிருந்து நன்னிலம் வரையிலான பாதை முழுமைக்கும் (சுமார் 12 கி.மீ) நடைப்பாவாடையிட்டு, இருமருங்கிலும் ஆங்காங்கே வாழை, கமுகுகளை நிரைநிரையாக நாட்டி, தோரணங்களால் அலங்கரித்துப் பின் நன்னிலத்தில் தம்பிரான் தோழரை



எதிர்கொண்டு வணங்கிப் போற்றியவாறு வீழிமிழலைக்கு அழைத்துச் செல்கின்றனர்.

"பாடிஅங்கு வைகியபின் பரமர் வீழி மிழலையினில்
நீடு மறையால் மேம்பட்ட அந்தணாளர் நிறைந்தீண்டி
நாடு மகிழ அவ்வளவும் நடைக்காவணம் பாவாடையுடன்
மாடு கதலி பூகநிரை மல்க மணித்தோரண நிரைத்து"

- (ஏயர்கோன் கலிக்காமர் - திருப்பாடல் 57)

தம்பிரானை நேரில் எதிர்கொண்டு, புண்ணியந்த பெருமக்கள் அவரது திருவடித் தொட்டு வணங்கி, அரசருக்கே உரிய மரியாதையுடன், வீழிமிழலைக்கு அழைத்துச் செல்கின்றனர்.

"வந்து நம்பி தம்மை எதிர்கொண்டு புக்கார் மற்றவரும்
சிந்தை மலர்ந்து திருவீழிமிழலை இறைஞ்சிச் சேண்விசும்பின்
முந்தை இழிந்த மொய்யொளிசேர் கோயில்தன்னை முன்வணங்கிப்
பந்தமறுக்கும் தம்பெருமான் பாதம் பரவிப் பணிகின்றார்."

- (ஏயர்கோன் கலிக்காமர் - திருப்பாடல் 58)

அங்கு சுந்தரர் முதலில், விண்ணிலிருந்து இறங்கிய தாகும் விண்ணிழி விமானம் (அதாவது திருக்கோயில் விமானம்) முன்னே வணங்கினார். பசுமைபோல் ஒளி விளக்கும் கோயிலையும் கண்டு உளமுருகி, திருமால், பெருமானை வணங்கிய தலமாகிய அற்புத வீழிமிழலையில் சுந்தரர், முன்னோர் புகழ்ந்தபடி தம்பெருமானை வணங்கி, சிந்தையைத் திறந்துரைத்து, நன்றியுடன் வேண்டி வணங்கினார்.

"படங்கொள் அரவில் துயில்வோனும் பதுமத்தோனும் பரவரிய
விடங்கன் விண்ணோர் பெருமானை விரவும் புளகமுடன் பரவி
அடங்கல் வீழி கொண்டிருந்தீர் அடியேனுக்கும் அருளுமெனத்
தடங்கொள் செஞ்சொல் தமிழ்மாலை சாத்தியங்குச் சாருநாள்."

- (ஏயர்கோன் கலிக்காமர் -திருப்பாடல் 59)

உளமகிழ்ந்த சுந்தரர் பெருமான், அற்புதத் திருப்பதிகம் ஒன்றினால் சிவபெருமானின் அருள் பெற்றோரைத் திருப்பாடல்கள் தோறும் குறிப்பிட்டுப் பின் 'அடியேனுக்கும் அருளுதீரே' என்று நயமாக விண்ணப்பித்துப் போற்றுகின்றார்.

பரந்த பாரிடம் ஊரிடைப் பலிபற்றிப் பாத்துணும் சுற்றமாயினீர்
தெரிந்த நான்மறையோர்க்கு இடமாய திருமிழலை
இருந்து நீர்தமிழோடு இசைகேட்கும் இச்சையால் காசுநித்தல் நல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே!

- (சுந்தரர் தேவாரம்: திருவீழிமிழலை: திருப்பாடல் 8)

இந்த பாடலில் வீழிமிழலை இறைவன், தமிழுக்குத் திருப்பணி செய்த நாயன்மார்களுக்கு ஏற்ப, இசை செழிக்கும்படி அன்போடு நிதியும் அளித்தவென்று போற்றுகிறார். சுந்தரரே சொல்லுகிறார்:

"இருந்து நீர்தமிழோடு இசைகேட்கும் இச்சையால் காசுநித்தல் நல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே!"

- (திருவீழிமிழலை - சுந்தரர் தேவாரம் - பதிகம் 8)

இறுதியில், அந்த மிகுந்த அருளைப் பெற்றவர்களுடன், தாமும் ஒரு அடியேனாக, பாங்குடன் அருளைப் பெற வேண்டுவார்!

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# சொற்சிலம்பம்-3

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | 03 | 04 | |
| 05 | | | | | | | |
| | | | | | | | |
| | | | 06 | | | | 07 |
| | | 08 | | | | | |
| 09 | | | | | | | |
| | | | | 10 | | | |
| 11 | | | | | | | |

### இடமிருந்து வலம்

*01.* திருநாளைப் போவார் அவதரித்த திருத்தலம்
*02.* பசு அறிவை மறைப்பது
*05.* சைவத்தில் இச்சமுக அடக்குமுறை இல்லை
*06.* உலக மக்கள் அனைவரும் விரும்புவது
*08.* அன்புடையார்...................... உரியார் பிறர்க்கு
*10.* இது தலைகாக்கும்
*11.* குறவஞ்சி பாட்டுடைய திருத்தலம் (திரும்பி)

### மேலிருந்து கீழ்

*01.* சைவ தலைமைபீடம்
*02.* பாவங்களின் கூலி
*03.* சத்தியின் திருப்பெயர்
*04.* இசைக்கருவி
*06.* இதுவே சிவம்
*07.* தொன்மையான விடயங்களை சொல்லும் நூல்
*09.* காவலுக்குரிய ஆயுதம்

பாடசாலை மாணவர்கள், மேலே உள்ள சொற்சிலம்பத்தை பிரதிசெய்து, அதனைப் பூர்த்தி செய்து, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்கு விபரத்தையும் அனுப்பி வைக்கவும். வெற்றியாளர்களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசில் வழங்கப்படும்.

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**

**ஆனித் திங்கள் 16 ஆம் நாள் (30-06-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# சொற்சிலம்பம்-2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 மா | ணி | க் | 02 க | வா | 03 ச | க | 04 ர் |
| ன் | | | ட | | 04 ங் | | ர |
| | 05 ச | ம | ம் | | 06 க | லி | த |
| 07 கா | ர் | | ப | | ர | | ந் |
| ன | ப் | | 08 ம | க | ன் | | சு |
| ம் | ப | | ர | | | 09 ப | |
| | ம் | | 10 ம் | ச | ம | ய | |
| | | | | | 11 கு | ம் | மி |

### இடமிருந்து வலம்

*01.* திருவாதவூரடிகள்
*05.* திருக்கோயிலில் அனைவரும்
*06.* இறைவழிபாட்டில் பயன்படும் பழம் (குழம்பி)
*07.* மேகம்
*08.* சிறுதொண்டரின் உணவில் இருந்தது
*10.* மனிதனை நல்வழிப்படுத்துவது (குழம்பி)
*11.* பழந்தமிழர் கலைவடிவம்

### மேலிருந்து கீழ்

*001.* சிவன் கையில் இருப்பது
*02.* கோயில் மரங்களில் ஒன்று
*03.* இன்பத்தைக் கொடுப்பவன்
*04.* நாயன்மார்களில் ஒருவர் (குழம்பி)
*05.* சிவனுக்கு ஆபரணம்
*07.* இராவணன் பாடியது
*09.* திருப்புகழ் பாட இது விலகும்

## பரிசில் பெறுபவர்கள்

**செல்வி ரஞ்ஜனி கணேசன்**
**வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்**

www.thennadu.org 



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# அருள் ஒளி பெறட்டும் நம் ஆதீனம்!

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குரு நிலைப்பீடத்தில் வீற்றிருந்த, சீர்வளர்சீர் சோம சுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அண்மையில் சிவப்பேறு பெற்ற பின், நல்லை ஆதீனத்தின் குரு நிலைப்பீடம் வெறுமையாகவே இருப்பது நம் தவக்குறைவே!

ஆதீனமரபுகளுக்குப் புறம்பான இவ்வெற்றிடம் இன்னும் அதிக காலம் நீடிக்கக் கூடாது! இன்றைய இளைய சமுதாயம் விரைவான வாழ்நிலைக்கும் உலகியலுக்கும் முன்னுரிமை அளித்து வருகிற காலகட்டத்தில், ஆன்மீக வளர்ச்சி மற்றும் சைவ மரபுகளின் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுகிறது. யாழ்ப்பாணம் போன்ற சைவ பாரம்பரிய மிக்க இடங்களில், இளமையான துறவிகளால் ஆதீனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே இன்றைய காலத்தின் தேவை ஆகும்.

துறவு வாழ்வுக்கு தம்மை உட்படுத்தும், இளம் தலைமுறை துறவிகள் சைவ சித்தாந்தத்தின் ஆழ்ந்த வரலாறையும் அற நெறியையும் புரிந்து கொண்டு, அதை இன்றைய உலகுக்கு ஏற்ப புதுமையாக எடுத்துச் செல்ல முடியும். இளந்துறவிகளின் ஊக்கமும் உற்சாகமும் சைவ சமய போதனையில் தெளிவையும் ஈர்ப்பையும் ஏற்படுத்தும். யாழ்ப்பாண சைவ அடித்தளங்களான கோயில்கள், மடங்கள், அறக்கட்டளைகள் இவற்றை மீளச்சீரமைப்பதற்கு இளம் தலைமுறையின் எண்ணம் மற்றும் தொழில்நுட்ப அறிவு உதவியாக அமையும்.

எனவே, இளமையான, நற்கல்வியும் ஆன்மிக உணர்வும் உடைய துறவிகள் யாழ்ப்பாணத்தில் உருவாக வேண்டிய அவசியம் அதிகமாக இப்போது உணரப்படுகின்றது. இது சைவத்தின் மீளுருவாக்கம் மட்டுமல்ல, சமூக நலனுக்கான அடித்தளமாகவும் அமையும்.

யாழ்ப்பாணத்தின் சைவ மரபு ஆறுமுகநாவலருக்கு முன்பே செழிப்புற்று இருந்தாலும், அது நாவலர் என்ற இளந்துறவியால் பேரெழுச்சி பெற்றதை நாம் அறிவோம்! சைவ எழுச்சியால் தமிழ் இனம் இங்கு சுயம் இழக்காமல் நிலைபெற்றது. ஆனால் இன்று, நம் சைவ மரபு பல இடங்களில் சிதைந்து காணப்படுகின்றது. இதற்கான முக்கிய காரணம் இளம் தலைமுறையினர் ஆன்மீக வழியில் குறைவாக ஈடுபடுதலே ஆகும்! இதை மாற்ற வேண்டுமெனில், இளமையின் குரலும் செயலும் நல்லை ஆதீனத்தில் ஒலிக்க வேண்டும்!

இளம் துறவிகள் ஆன்மீக அன்போடு துறவறத்தைக் கற்றுக் கொண்டு, சைவ சித்தாந்தத்தின் ஆழமான படிப்பினைகளையும், மக்களின் வாழ்வில் அதன் நடைமுறையையும் எடுத்துச் செல்ல வேண்டும். சொல்ல வேண்டும். நவீன மொழி திறன்கள், சமூக ஊடகங்களின் பயன்பாடு, மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றால் அவர்கள் சைவ சமயத்தை இன்றைய தலைமுறைக்கு எளிதாக கொண்டு சேர்க்க வேண்டும்!

யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் துறவியாக வரும் போது, அது ஒரு ஆன்மீகப் புரட்சிக்கு வழிவகுக்கும்! இது வெறும் கோயில்களில் பூசை நடத்துவதை விட, மக்களின் உள்ளங்களிலும் ஒளியை பரப்பும் செயலாக அமையும். நம் ஆதீனமாக இருக்கின்ற நல்லை ஆதீனத்தின் மூன்றாவது குரு நிலைப் பீடத்தில் புதிய இளைய சைவ ஒளி எழுச்சி பெறட்டும்! இன்னும் சைவாதீனங்கள் உருவாக வேண்டும் என்பது தேவை மட்டுமல்ல, சைவத்தமிழர்களின் எதிர்கால வாழ்வின் அடிப்படையாகவும் அமைகிறது!

**திருச்சிற்றம்பலம்**

# எம்பிரான் அன்பரான எறிபத்த நாயனார்



செல்வி.
நவிசா ஈஸ்வரானந்தம்
கலைமாணி

கருணாமூர்த்தியாகிய பரம்பொருளின் பத்தர்களும் ஏற்படும் துன்பங்களை எம்பெருமானுக்கு ஏற்பட்ட துன்பமாக எண்ணி தண்டனை வழங்கியவர் சோழ மன்னனாகிய புகழ்ச்சோழ மன்னனால் **“..அன்பர் முன் தொழுது சென்று” (திருத்தொண்டர் புராணம்12:14:39)** என்ற அடிகள் மூலம் தொழுத, **“அஞ்சிப் பாதங்கள் முறையால் தாழ்ந்து பருவரைத் தடந்தோள் மன்னன்.” (திருத்தொண்டர் புராணம்12:14:41)** என்ற அடிகள் மூலம் வணங்கிய பெருமைக்குரியவர்

**புகழ்ச்சோழ மன்னனால் “..மங்கல மழு” (திருத்தொண்டர் புராணம்12:14:42)** என்று போற்றப்பட்ட மழு எனும் ஆயுதத்தை சிவனடியார்களை தீங்கிலிருந்து காப்பாற்றுவதற்காக எப்போதும் வைத்திருந்தவர் பத்தியின் முக்கியத்துவத்தையும், இறையாண்மையையும் பாதுகாக்க ஒருவர் எந்தளவு தூரம் செல்ல முடியும் என்ற வன்பத்தியையும், சிவனின் எல்லையற்ற கருணையையும் தன் வாழ்வியலூடாக இவ்வுலகிற்கு உணர்த்தியவர் சிவபத்தி என்பது உள்ளத்தில் அல்ல நம்முடைய உதிரத்தில் உருவேறினால் மட்டும் தான் சிவனடியாரக விளங்கலாம் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டியவர் அசைக்க முடியாத பத்தி, தைரியம் மற்றும் சுயதியாகத்தின் நீடித்த அடையாளமாக திகழ்ந்தவர் வழிபாடு, பிரார்த்தனைகளுடன் இவரது பத்தி நின்றுவிடாமல் ஏனைய அடியவர்களுக்கு சேவை செய்வதாக தனது பத்தியை நீடித்தவர்

**“இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தர்க்கு அடியேன்”**

என சுந்தரமூர்த்தி சுவாமிகளால் போற்றப்பட்டவர் இத்தகு பெருமைகளையெல்லாம் தன்னகத்தே கொண்டவராக கருவூர் என்றழைக்கப்பட்ட கரூர் என்ற தலத்தில் தோன்றியவர் எறிபத்த நாயனார் ஆவார். அடியார்களுக்கு யாராவது துன்பம் செய்தால் எதையும் சிந்திக்காது உடனே பரசு என்ற ஆயுதத்தால் எறிந்து அவ்வடியாரை அத்துன்பத்திலிருந்து காப்பாற்றி விடுவாதால் எறிபத்த நாயனார் என்ற நாமத்தைப் பெற்றார்.

இங்கு எழுந்தருள் புரியும் இறைவன் ஆனிலையப்பர். இத்தலத்தில் ஆன்மாக்கள் பதியாகவும், இறைவன் பசுவாகவும் இருந்து ஆட்சி செய்யக்கூடிய அற்புத ஆற்றலைப் பெற்ற பசுபதீசுவரரும்: அருள்நாயகி (கிருபாநாயகி), செழுந்தமிழ் மடந்தை (சௌந்தரிய நாயகி) என இரு சத்திகளும் எழுந்தருள் புரிகிறார்கள்.



இவ்வாலயத்தில் இறைவனுக்கு பூத்தொண்டு புரிந்த சிவகாமியாண்டார் வயோதிப காலத்திலும் ஒவ்வொரு நாளும் பூ பறித்துக் கொண்டு வந்து பசுபதீசுவரரை அலங் கரித்து மகிழ்வதில் அவருக்கு பேரானந்தம். புரட்டாதி ஒன்பான்பிறை (நவமி) தினத்தில் இக்கோயிலின் திருவிழா நடைபெறுவதால் திருவிழாவுக்கான முன்னாயத்த வேலை கள் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் தருணத் தில் பூக்கூடலோடு சிவகாமி ஆண்டார் கோயிலிற்கு வரு கின்றார். அப்போது புகழ்ச்சோழச் சக்கரவர்த்தியின் பட்டத்து யானையுடன் ஐவர் அமராவதி நதியில் நீராடிவிட்டு பசுபதீசு வரரை வணங்குவதற்காக வருகின்ற போது திடீரென யானைக்கு மதம் ஏற்பட்டு கோயிலை நோக்கி விரைவாக ஓடி அவ்வழியே சென்ற சிவகாமி ஆண்டாரின் பூக்கூடலைத் தும்பிக்கையால் தட்டி விட சிவகாமி ஆண்டாரும் சோர்ந்து தரையில் விழுந்து விட்டார். உடனே சிவகாமி ஆண்டார் தான் விழுந்ததை விட தனது பூ விழுந்து விட்டதென **"சிவதா சிவதா"** என கதறி அழுதார்.

அடியார் ஒருவரின் கதறல் சத்தம் கேட்டு அவ்விடம் விரைந்து வந்த எறிபத்த நாயனார் தனது பரசு என்ற ஆயுதத் தால் அடியாரின் துன்பத்திற்கு காரணமான யானையையும், யானையுடன வந்த ஐவரையும் கொன்றார் என்ற இவருடைய வாழ்வின் முக்கிய அம்சத்தை சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில்,

**என்றவர் உரைத்த மாற்றம்**
**எறிபத்தர் எதிரே வாரா**
**நின்றவர் கேளாமுளும் நெருப்பு**
**உயிர்த்து அழன்று பொங்கி**
**மன்றவர் அடியார்க்கு என்றும்வழிப்**
**பகை களிறே அன்றோ**
**கொன்று அதுவீழ்ப்பன் என்று**
**கொலை மழுஎடுத்து வந்தார்.**
**(திருத்தொண்டர் புராணம்12:14:20)**

மிக அழகாக எடுத்தியம்பியுள்ளார். செய்தியறிந்த புகழ் சோழ மன்னன் யார் செய்தார் என்று கேளாமல் கிளர்ந்தெழு கோபத்துடன் புறப்பட அவரைத் தொடர்ந்து படைகளும் சென்றன. அவ்விடம் விரைந்து வந்தார். யார் கொன்றது எனக் கேட்க, பரசுடன் நிற்கும் எறிபத்தநாயனார் எனக் கூறி னார்கள். அக்கணமே அவரில் குடிகொண்ட கோபம் விலகி அருட்குணத்தில் தோய்ந்த அடியார் கொன்றிருக்கிறார் என்றால் ஏது பிழை செய்தாரே என சிந்தித்து உடனே தன் படைகளை அனுப்பி விட்ட நொடியில் குதிரையில் இருந்து இறங்கி நல்ல வேளை அடியாருக்கு ஏதும் துன்பம் விளைய வில்லை என்ற மகிழ்வோடு தொழுது சென்று யானையையும் பாகரையும் கொன்றது போதுமா? ஏன வினாவ எறிபத் தர் நடந்த சம்பவத்தைக் கூற மன்னன் பாதத்தில் வீழ்ந்து வணங்கி சிவனடியாரைத் துன்புறக் காரணமானதால் பிழை செய்தது நான் ஆகவே அப்பிழைக்கு ஒழுக்கநெறிப் பொறுப்பு என்னுடையதே என்னைக் கொல்லுங்கள் என்றார்.

ஆனால் தாங்கள் கையில் உள்ள பரசால் கொல்ல வேண்டாம். அது **"..மங்கல மழு" (திருத்தொண்டர் புராணம்12:14:42)** அதனால் வெட்டடினால் தனக்கு புண்ணியம் வந்து விடும் ஆகவே தன் வாளால் வெட்டுங்கள் எனக் கூறி வாளை கொடுத்த போது எறிபத்தர் அவ்வாளால் தன்னை வெட்ட முயன்ற போது வாளையும் கையும் மன்னன் இறுக சேர்த் துப் பிடித்து விடுங்கள் என்ற போது இருவருக்கும் பிழை செய்தது தாமே என நெறியிருக்க (தர்மசங்கடம்) நிலையில் தவித்து நின்ற போது பரம்பொருள் அசரீரியாக கூறியதை சேக்கிழார் தனது திருத்தொண்டத்தொகையில் ,

**தொழுங்கை அன்பின் மிக்கீர்!**
**தொண்டினை மண் மேற்காட்டச்**
**செழுந் திருமலரை இன்று**
**சினக்கரி சிந்தத் திங்கள்**
**கொழுந்தணி வேணிக் கூத்தர்**
**அருளினால் கூடிற்றென்று அங்கு**
**எழுந்தது பாக ரோடும்**
**யானையும் எழுந்தது அன்றே.**
**(திருத்தொண்டர் புராணம்12:14:48)**

என நயம்படக் கூறியுள்ளார். அதாவது அன்போடு ஒரிடத் தில் மூவரும் இருக்கும் சந்தோசத்தில் பரம்பொருள் மூவரும் அன்பில் சிறந்தவர்கள்கள் தான் ஆயினும் தங்கள் அன்பையும் தொண்டையும் இவ்வுலகிற்குக் காட்டவே இப்படி ஒரு நாடகம் ஆடினோம் கவலைப்படாதே மாண்டவர் மீண்டு எழுவர், என்றென்றைக்கும் நிலைத்த புகழை நீ பெறுவாய் என்று இறைவன் வரமளித்தார்.

பூக்கள் கூடியது, மாண்ட ஐவரும் மீண்டும் எழுகிறார்கள், யானையும் உயிர் பெற்று எழுகின்றது. சிவகாமி ஆண் டாரை யானை வணங்கியது. மீண்டும் பூக்கள் கூடையை அடைந்தது. பசுபதீசுவரரை எல்வோருமாக சேர்ந்து வழி பட்டு நலன் பெற்றார்கள். இறையடியார்க்கு துன்பம் வரா மல் அணுக்சனமும் பாதுகாக்கும் தொண்டுபுரிந்து மாசி எண்மைபிறை (அட்டமி) நன்னாளில் இறையடி சேர்ந்தார்.

**"எறிபத்தர் அன்பு பெருமானுக்குத்தான் தெரியம்"** என்று சேக்கிழார் சுவாமிகளால் போற்றப்பட்ட பெருமையோடு சிவனடியார் மீது தலையன்பு பூண்டு வாழ்ந்து இறைவ னின் அன்புக்கு பாத்திரமாகி அதனையே முத்திக்கு வழியாக் கிய பெருமைக்குரியவராக எறிபத்தநாயனார் விளங்கினார் என்றால் மிகையில்லை.

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-
## அருள்மிகு வேயுறுதோளியம்மை உடனுறை அருட்சோமநாதர் - திருநீடூர்
## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 21 ஆவது திருக்கோயில் திருநீடூர்



"நிறமா மொளியானை நீடூ ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே"

**"நீடூர்"** என்ற திருப்பெயர் பெற்று, உலக முடிவிலும் அழிவடையாது உயிர்களைக் காத்திடும் அருள்மிகு வேயுறு தோளியம்மை உடனுறை அருட்சோமநாதர் பெருமான் உறையும் அற்புதத் தலமே திருநீடூர் திருத்தலமாகும்.

**அமைவிடம்: நாகப்பட்டினம், தமிழ்நாடு.**

மயிலாடுதுறை - மணல்மேடு சாலையில், மயிலாடுதுறையிலிருந்து வடக்கே சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் அமைந்த நீடூர் எனும் ஊரில், சாலை ஓரத்திலேயே இக்கோயில் காணப்படுகிறது. மயிலாடுதுறையிலிருந்து நீடூருக்குச் செல்ல நகரப் பேருந்து வசதி ஏற்பாடாக உள்ளது. வைத்தீசுவரன் கோயிலிலிருந்து வருபவர்கள், திருப்பனந்தாள் செல்லும் சாலையில் பட்டவர்த்தி எனும் கிராமத்தை அடைந்த பின், இடதுபுறமாகத் திரும்பி மயிலாடுதுறைச் சாலையில் சென்று நீடூரை எளிதாக அடையலாம்.

**இறைவர் திருப்பெயர்: அருட்சோமநாதர், நிருத்தகானப்பிரியர், கானநிர்த்தனசங்கரர், பத்திரகாளீசுவரர்.**
**இறைவியார் திருப்பெயர்: வேயுறுதோளியம்மை, ஆதித்திய அபயபிரதாம்பிகை, வேதநாயகி, ஆலாலசுந்தரநாயகி.**
**கோயில் மரம்: மகிழுமரம்.**
**தீர்த்தம்: சந்திர புட்கரணி, இந்திர தீர்த்தம், செங்கழு நீரோடை, பத்திரகாளி தீர்த்தம், பருதிகுண்டம், வருண தீர்த்தம் ஆகியன.**
**வழிபட்டோர்: சம்பந்தர், அப்பர், சுந்தரர், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், இந்திரன், சூரியன் முதலியோர்.**
**பாமாலை: சம்பந்தர், அப்பர், சுந்தரர்.**

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**
**திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்**

**பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னைப்**
**பேணாதார் அவர்தம்மைப் பேணா தானைத்**
**துறவாதே கட்டறுத்த சோதி யானைத்**
**தூநெறிக்குந் தூநெறியாய் நின்றான் தன்னைத்**
**திறமாய எத்திசையுந் தானே யாகித்**
**திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை**
**நிறமா மொளியானை நீடூ ரானை**
**நீதனேன் என்னேநான் நினையா வாறே. (06-11)**

**சுந்தரர் அருளிய திருப்பதிகம்**

**ஊர்வ தோர்விடை ஒன்றுடை யானை**
**ஒண்ணு தற்றனிக் கண்ணுத லானைக்**
**கார தார்கறை மாமிடற் றானைக்**
**கருத லார்புரம் மூன்றெரித் தானை**
**நீரில் வாளைவ ரால்குதி கொள்ளும்**
**நிறைபு னற்கழ னிச்செல்வ நீடூர்ப்**
**பாரு ளார்பர வித்தொழ நின்ற**
**பரம னைப்பணி யாவிட லாமே (07-56)**

**திருத்தலச் சிறப்பு**

உலகம் அழியும் ஊழிக் காலத்திலும் அழியாமல் நிலைத்திருப்பதால், இத்தலத்திற்கு **"நீடூர்"** எனப் பெயர் பெற்றதாக நம்பப்படுகிறது. இத்தலத்தில் தலமரமாக மகிழம் விரிந்து வளர்கின்றது. அதனால், இத்தலத்திற்கு மகிழவனம், மகிழாரண்யம், வகுளாரண்யம் என்ற பெயர்களும் உண்டு.

இத்தலத்தில் இந்திரன், சூரியன், சந்திரன், காளி, நண்டு ஆகியோர் வழிபட்டு பேறு அடைந்துள்ளனர். இந்திரன், காவிரி நதியின் மணலைக் கொண்டு இலிங்கத்தை உருவாக்கி வழிபட்டார். அதன் விளைவாக அந்த இலிங்கம் வெண்மை நிறமாக மாறியது. பின்னர் ஒரு நண்டு அந்த இலிங்கத்தை வழிபட்டு, அதில் உள்ள சிறிய துளையில் புகுந்து இறைவனுடன் இரண்டறக் கலந்ததாக செவிவழிக் கதைகள் கூறுகின்றது. இந்நிகழ்வின் அடிப்படையில், இன்றும் அந்த இலிங்கத்தில் நண்டு புகும் அளவிலான துளை காணப்படுகிறது.

இறைவர் அருட்சோமநாதேசுவரர், சுயம்பு மூர்த்தியாக இத்தலத்தில் அருள்புரிகிறார். ஆவணி திங்களில் சூரியனின் ஒளி அவர்மீது நேரடியாக விழும் சிறப்பு உள்ளது. இத்தலத்தில் ஒன்பான்கோள்கள் (நவக்கிரகம்) சன்னதி இல்லையென்பதும், சனீசுவரர் மட்டும் தனிப்படியாக அம்மனுக்கு எதிரே கிழக்கு நோக்கி உள்ளதுமாகக் காணப்படுகிறது. இதனால், ஒரே இடத்தில் இருந்து அம்பாளையும் சனியையும் வணங்க முடிகின்றது.

**திருத்தல வரலாறு**

திருநீடூர் (நீடூர் அல்லது மகிழவனம்) என்பது ஆழமான புராண வரலாற்றும், ஆன்மிகச் சிறப்புமுள்ள சிவத்தல

மாகும். இத்தலத்தில் இந்திரன், சூரியன், சந்திரன், பத்திர காளி, நண்டு ஆகியோர் இறைவனை வணங்கி பேறடைந்த வர்களாக வரலாற்றில் குறிப்பிடப்படுகிறார்கள்.

இந்திரன், தன் அகந்தையை கெடுக்கும் வகையில் சிவனை வழிபட்டதாக நம்பப்படுகிறது. காவிரி நதியின் தூய மணலைக் கொண்டு சிவலிங்கம் உருவாக்கி வழிபட்டதால், இலிங்கம் வெண்மை நிறமடைந்ததாக நம்பிக்கை. சூரியன் இத்தலத்தில் சிவனை வழிபட்டு, தன் ஒளிக்கதிர்கள் ஆண்டவன் மீது விழவேண்டும் என வேண்டினார். இன்றும் ஆவணி திங்களில் சூரியகதிர் நேரடியாக மூலவர் மீது விழும் அற்புத நிகழ்வு இத்தலத்தில் நிகழ்கிறது.

பத்திரகாளி தாயார் தனது கோபநிலை தணிந்து சிவபத்தியில் நிலைத்தபடி வழிபட்டார். நண்டு என்பது ஒரு முன்வினைப் பயனாக பிறந்த அசுரன். நாரத முனிவரின் அறிவுரையின்படி இத்தலத்தில் இறைவனை வழிபட்டு, சிவலிங்கத்தில் உள்ள ஒரு சிறிய துளையில் புகுந்து, இறைவனுடன் இரண்டறக் கலந்தார் என்கிறது செவிவழிக் கதைகள். இதனால் நண்டு வழிபட்ட தலமாக இத்தலம் போற்றப்பட்டு வருகின்றது. இன்றும் அந்த இலிங்கத்தில் அந்த **“நண்டு புகும் அளவிலான சிறிய துளை”** காணப்படுகிறது.

### திருமுறைப் பாடல்கள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள்

திருநாவுக்கரசர் (6-ம் திருமுறை): திருநீடூர் பற்றிய திருப்பதிகம், திருநாவுக்கரசரால் பாடப்பட்டது. அவரது பாடலில், இத்தலத்தில் இறைவனின் அருள் பெருமை, இத்தலத்தின் புனித தன்மை, பத்தர்களின் வழிபாடு ஆகியவை ஓங்கியிருக்கும்.

**“வளங்கெழு காவிரிக்கரை ‘மகிழவனம்’**
**ஒளிநிற வானவர் உவந்தாடும் இடம்” - திருநாவுக்கரசர், 6-ம் திருமுறை**

**சுந்தரர் (7-ம் திருமுறை):** சுந்தரர், திருநின்றியூரிலிருந்து திருப்புன்கூர் செல்லும் வழியில் நீடூரில் வழிபாடு செய்தார். அவர் பாடிய பாடலில்:

**“நாடு சீர் நீடூர் வணங்கி நமச்சிவாயமே என்று நாவினால் உரைசெய்து” - சுந்தரர், 7-ம் திருமுறை**

சேக்கிழார் பெருந்தகையாரின் பெரிய புராணத்திலும் **“திருப்புன்கூர் உறை மாலையிடை”** என்ற பகுதிகளில் சுட்டிக் காட்டப்படுகிறது. சுந்தரர், இறைவனை நேரில் வணங்க விரைந்து செல்வதற்காக கோயிலுக்குள் செல்லாமலேயே நீடூரை வழிபட்டுச் சென்றதை கூறுகின்றனர்.

### முனையடுவார் நாயனார் - தோற்றமும் பெருமையும்

முனையடுவார் நாயனார், இத்தலத்தில் பிறந்தவர். அவருடைய வாழ்க்கை முழுமையாக ஈசன் அடியார்களுக்கு சேவை செய்வதற்கே அர்ப்பணிக்கப்பட்டது. அவர் சமையல் திறமையால் பெருமைப்படுபவர். எப்போதும் அடியார்களுக்கு சுவையான உணவுகளைச் செய்து வழங்கினர். எளிமை, தியாகம், பத்தி, அன்பு ஆகிய நான்கு குணங்களும் இவரில் ஓங்கியிருந்தன. பத்திரமான பண்பாடுகளும், அழகான எண்ணங்களும் கொண்டு, திருவினையின் வழியில் வாழ்ந்தவர்.



**“அடியார்கள் உண்ணும் சுவையை, அவர் நாவும் அறியார்”** என்று பெரியபுராணம் நூலில் சேக்கிழார் கூறுகிறார். அதாவது, அவர் செய்த உணவுகளைக் குடிக்கும் சிவபத்தர்களின் மகிழ்ச்சியையே, தாம் விரும்பினர். தம்முடைய சுவை எதுவும் அவசியமில்லை என்பதைத்தான் கூறுகிறார். பங்குனி திங்கள், பூச நாண்மீனில், இத்தலத்தில் அவருக்கு குருபூசை விழா நடைபெறுகிறது.

திருநீடூர், சிவபெருமானின் அருள்நிறைந்த அற்புதத் தலம். இதன் வரலாறு, திருமுறைப் பாடல்களில் ஒளிர்வதோடு மட்டுமல்லாது, நாயனார் தோற்றம், தலநம்பிக்கைகள் மற்றும் பத்தியின் பெருமைகளை எடுத்துரைக்கும் உயிரோட்டமான ஒரு திருத்தலமாகத் திகழ்கிறது.

### திருக்கோயில் அமைப்பு

இத்தலத்தில் இராசகோபுரம் இல்லை. கிழக்கு நோக்கி ஒரு வாயில் மட்டுமே உள்ளது. முகப்பில் இடபவாகனர், விநாயகர், முருகர் ஆகியோரின் வண்ண சுதை சிற்பங்கள் உள்ளன. நுழைவாயிலைத் தொடர்ந்து தலமரமான மகிழம், நந்தி, பலிபீடம், கொடிமரம் காணப்படுகின்றன. கோயிலில் இரண்டு வீதிகள் உள்ளன.

உள் வீதியில் சிவலோகநாதர், முருகர், காசி விசுவநாதர், கயிலைநாதர், திருமகள் ஆகியோர் சன்னதியில் உள்ளனர். மூன்று விநாயகர்கள் (சிந்தாமணி, செல்வ, சிவானந்த விநாயகர்கள்) இடதுபுறமாக உள்ளனர். கருவறை சுற்றில் பாலவிநாயகர், தென்முக கடவுள் (தட்சிணாமூர்த்தி), அண்ணாமலையார், நான்முகன், மலைமகள் ஆகியோர் காணப்படுகின்றனர்.

அம்பாள் சந்நிதி வெளி வீதியில் தெற்கே அமைந்துள்ளது. அங்கிருந்து அம்பாளையும், கிழக்கு நோக்கி தனியாக உள்ள சனீசுவரரையும் ஒரே நேரத்தில் வணங்க முடிகின்றது. இதனால், சனியினால் ஏற்படும் வினைகள் விலகும் என்று பத்தர்கள் நம்புகின்றனர்.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்



பவானி சிவ அ.வேலுச்சாமி

**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**

**திருமலைச்சிறப்பு பாடல் 17**

**அந்தி வான்மதி சூடிய அண்ணல்தாள்**
**சிந்தி யாஉணர்ந்து அம்முனி தென்திசை**
**வந்த நாவலர் கோன்புகழ் வன்தொண்டன்**
**எந்தை யார்அரு ளால்அணை வான்என**

**பொருள்**

மாலையில் வானில் தோன்றும் பிறைச்சந்திரனைச் சிரத்திலே சூடிய பெருமானின் திருவடிகளைத் தியானித்து உண்மை உணர்ந்தவராய் அந்த உபமன்னிய முனிவர், தென்திசையில் வந்து அவதரித்த நாவலூர் நம்பிகளாகிய புகழ்ச்சிமிக்க வன்தொண்டர், எம்பெருமானுடைய திருவருளினாலே மீண்டும் கயிலைக்கு எழுந்தருள்கின்றார் என்று சொல்லி.

**வி-உரை**

தென்திசையில் நம்பிகள் வந்தது திருவருள் ஆணை வழியேயாம் இப்போது வெள்ளை யானையின்மீது மீண்டும் கயிலைக்கு எழுந்தருளுவதும் அவரது ஆணை வழியேயாம். இதனைத் "தானெனை முன் படைத்தான்" எனும் திருநொடித்தான்மலைப் பதிகத்தால் அறிகின்றோம்.



**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**

**அண்ணல் - பெருமையுடையவன்**

**தாள் சிந்தியா உணர்ந்து:-**தாள்களைச் சிந்தித்து அந்தச் சிந்தனையின் துணையால் உணர்ந்து என்க. உபமன்னிய முனிவர் இறைவனிடத்தில் அந்தப் பேரொளியாக வானத்தில் வருவது யார் என்று இறைவனிடத்தில் விண்ணப்பம் வைக்க, பெருமான் நம்முடைய சுந்தரன் (ஊரன்) என்று முனிவரிடத்திலே உணர்த்தியதாக நம்பிகளே தனது பதிகத்தில் பாடியுள்ளார். **"மந்திர மாமுனிவர் இவனாரென நம் பெருமான் நந்தமர் ஊரன் என்றான் நொடித்தான்மலை உத்தமனே" பாடல்-9**

உபமன்னிய முனிவருக்கும் பெருமானுக்கும் இடையே நடந்ததை நம்பிகள் தன்னுடைய மனத்தால் உணர்ந்து பதிகத்தில் பதிவு செய்கிறார். பெரியபுராணத்தில் ஆரம்பமும் இறுதியாகவும் வைத்துப் போற்றக்கூடியது இந்த இடமே. இவ்வரலாற்றை நம்பிகள் கயிலை வரும் வழியில் உணர்ந்து பாடியருளிய அற்புதமும் காண்க என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் உரையில் விளக்கியுள்ளார்கள்.

**சிந்தியா உணர்ந்து**

சிவன் தன்னையே உணர்ந்து உள்ள முனிவராயினும் இது தெரியும்படித் தனித்துச் சிந்தித்து உணர்ந்தார் என்பது தோன்றிய சோதியின் வரலாறு தெரிய வேண்டியிருந்தது. அவ்வாறு தெரிவதனை ஏனைய மாதவர்களுக்கும் சொல்லவும் வேண்டியிருந்தது. அருட் சோதியாய்க் கயிலையில் தோன்றிய அது புலன் அறிவாலும் கலையறிவாலும் உணரலாகாதது. ஏனெனில் இவ்வறிவுகள் கட்டுப்பட்ட தன்மையுடையன. கட்டுப்படாத எல்லையில்லாத அறிவினால் உணரவேண்டியவன் இறைவன் அவனோடு கலந்த அடியார்களும் அவ்வாறே உள்ளவர்கள். ஆதலின் பதிஞான சிற்சக்தி உபகாரத்தால் உணரவேண்டுதலின் அண்ணல் தாள் சிந்தியா உணர்ந்து என்றார் என்று சிவக்கவிமணிஐயா அவர்கள் உரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

முனிவர் பேரரொளியை உணர்ந்தது பதிஞான சிற்சக்தி

யால் என்று அறியலாம் 'பதிஞான சிற்சக்தி' என்பது இறைவனுடைய திருவருள் சத்தியே

வன்தொண்டன் நம்பிகளது பெயர்கள் பலவற்றுள்ளும் இப்பெயரே மிகச்சிறந்தது. **"மற்று நீ வன்மை பேசி வன் தொண்டன் என்னும் நாமம் பெற்றனை"** என்று இறைவனே கூறியது. "மற்றிதற்குப் பதிகம் வன்தொண்டர்தாம், புற்றிடத்து எம் புராணர் அருளினால், சொற்ற மெய்த்திருத்தொண்டத் தொகை" என்பதைக் காணலாம். தொண்டு இருவகைப்படும் அவை வன்தொண்டு, மென்தொண்டு என்பது. சாத்திர விதிகளுக்குட்பட்டு அவற்றோடு இணங்கிச் செய்வதாம், சாத்திர அதீதமாய்ச் செய்வது வன்தொண்டாம் இது செய்பவர்கள் தற்போதம் சிறிதுமின்றிப் பதிகரணம் அடைந்தவர்கள்.

**பாடல் - 18**

**கைகள் கூப்பித் தொழுது எழுந்து அத்திசை**
**மெய்யில் ஆனந்த வாரி விரவிடச்**
**செய்ய நீள்சடை மாமுனி செல்வுழி**
**ஐயம் நீங்க வினவுவோர் அந்தணர்**

**பொருள்**

(உபமன்னிய முனிவர் உணர்ந்து) கைகளைச் சிரமேற் குவித்துத் தொழுது கொண்டே எழுந்தனராகி, பேரொளி தோன்றிய அத்தென் திசையை நோக்கித் தமது மேனி முழுதும் ஆனந்தவெள்ளம் பெருகச் சிவந்த நீண்ட சடையையுடைய உபமன்னிய முனிவர் சென்றனர். அவர் அவ்வாறு செல்லும் போது அதனால் தமக்குள் எழுந்த ஐயம் நீங்கும்படிச் சூழ இருந்த மாதவர்கள் பின்வருமாறு வினவுவாராயினர்.

**வி-உரை**

வானத்தில் பேரொளியாக வருவது நம்பிகள் என்று உணர்ந்தவுடனே தொழுது பிறகு எழுந்து திசையை நோக்கிச் செல்கிறார்.

**"தொழுது எழுந்து"** என்பது தொழுதெழுவாள் என்பது போல் கொள்க.

மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் அந்தப்புறத்தில் இருந்த நாயனார் தன்னைக் காண வந்தவர் திருநீறு பூசிய அடியவர் என்று தெரிந்தவுடன் படுக்கையில் இருந்து முதலில் கைகளைக் கூப்பிக்கொண்டு அதன்பிறகு எழுந்தார் என்று சேக்கிழார் பெருமான் அருளுகின்றார்.

**அண்டர் நாயகனார் தொண்டராம் என்று குவித்த செங்கை**
**கொண்டெழுந்து கொள்கையின் வணங்கி நின்று**
**(மெய்ப்பொருள் நாயனார் புராணம்)**

மெய்யில் ஆனந்தவாரி விரவிட - மேனி முழுவதும் ஆனந்தக் கண்ணீர் பெருக **"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்"** (குறள்) ஆனந்தவாரி அன்பைக் காட்டும் அடையாளம் அந்தணர் - மாதவர் **"அந்தணர் என்போர் அறவோர்"** (குறள்)

**பாடல் - 19**

**சம்பு வின்அடித் தாமரைப் போதலால்**
**எம்பி ரான்இறைஞ் சாய் இஃது என்? எனத்**
**தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇயவன்**
**நம்பி ஆரூரன் நாம்தொழும் தன்மையன்**

**பொருள்**

எம் தலைவரே! சிவபெருமானின் திருவடிகளைத் தவிர வேறு தொழுது எழுந்து திசைநோக்கிச்செல்லும் காரணம் என்ன? என்று எதனையும் பணியாத இயல்புடையீர். இப்போதுஇந்தச் சோதியைத் மாதவர்கள் கேட்க இங்கு வருகின்றவர் தம்பிரானாகிய சிவ பெருமானையே தமது உள்ளம் முழுவதும் தழுவிக்கொண்டுள்ளவர். அவர் நம்பி ஆரூரர் என்னும் பேருடையவர். அவர் நம்மால் தொழப்படும் தன்மை உடையவர்.

**வி-உரை- சம்பு - சுகத்தை உண்டுபண்ணுபவன்**

சம்பு இன் அடித்தாமரைப் போதுசிவபெருமானது இனிய தாமரை மலர் போன்ற திருவடி. இன்அடி - இனிய திருவடி இது என் - சம்புவின் திருவடியேயன்றி வேறொன்றையும் வணங்காத தலைவராகிய தேவரீர் இப்போது இச்சோதியை நோக்கிக்கைகூப்பித் தொழுது செல்லும் இது என்ன? என்று உடன் இருந்த முனிவர்கள் உபமன்னிய முனிவரிடத்தில் வினவினார்கள். தம்பிரான் - முழுமுதற்கடவுள் உள்ளந் தழீ இயவன்- உள்ளத்திலே இடையீடின்றி முழுதும் நிறையும்படிப் பொருத்தி வைத்தவன். நாம் வணங்கும் தம்பிரானைத் தம் மனத்தே நிறைய வைத்துக்கொண்டிருப்பவர். நாம்-சம்புவையன்றி வணங்காத நாம்.

தொழும் தன்மை - சம்புவை உள்ளந்தழீஇய காரணத்தால் வந்தது என்பது குறிப்பு. முனிவர்கள் எல்லாம் வணங்கக்கூடிய நம்பிரானை நம்பிகள் தன் உள்ளத்தில் வைத்து வழிபட்ட காரணத்தால் யாரையும் வணங்காத உபமன்னிய முனிவர் நம்பிகளை வணங்கியது கூறப்பெற்றது.

**"துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா நினைத் தோழமை கொண்டான்"** என்பது நால்வர் நான்மணிமாலை ஆசிரியர் சிவப்பிரகாச சாமிகள் வாக்கு.

**தொடரும்**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**



தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org




# Lord Siva for All

Earlier this month, Errol Musk, a philosopher, engineer, and father of tech visionary Elon Musk, visited India on a “spiritual and green pilgrimage.” On his itinerary were religious destinations like the Ram Mandir in Ayodhya and ISKCON in Delhi, but it wasn’t the architecture or the rituals that moved him. It was something deeper, the spirit of India, and more specifically, the eternal soul of Saivam

But the highlight of his travels would have been the glorious statement he dedicated to Lord Siva:

“I think if the whole world followed Siva, it would be all right.”

Errol Musk is no spiritual master. He is a man of machines, energy systems, and applied science. And yet he was drawn to Siva’s grandeur. For someone so invested in technology, coupled with the negative effects of the global confusion that exists in our time, such as ecological collapse, technological overload, and spiritual emptiness, to be able to draw such a spiritual conclusion is astonishing.

Errol would have found an antidote to the emptiness of modern society through Siva, as in his words, our religion “boggles the mind” in its wisdom and antiquity. If he wasn’t stumped by the intricacies and complexities of the sciences but was intrigued by our religion, it clearly demonstrates the greatness of Saivam.

But what we should draw from this lesson is the fact that in just six days, as an “outsider”, he was able to recognise the wisdom, depth, and relevance of the Lord, so what’s stopping us?

What does this say about us? Those who have been born into this tradition, whose ancestors have sung the Thevaram, built temples, and passed on saivam from generation? If he, with no background in our scriptures or our rituals, could catch a glimpse of the divine radiance of Shiva, why can’t so many of us?

We are overwhelmingly blessed and privileged to have been born into a religion that guarantees us freedom, intelligence, and peace of mind. It’s time we start living with the knowledge of it. Let us speak our thanks, cultivate our faith, and pay our due respects to the almighty Lord Siva.

# Saiva Saint Eripathar Nayanar The executioner



Srisankarshan
Srisatkunarajah
English Editor
Thennadu

As we explore the more mundane and impulsive stories of the Periya puranam, Eripathar comes 7th in order, known for his strictness in application of the actions and principles he saw or deemed right. His story is one that revolves around a singular incident which went on to show his determination, rather than a long gradual one highlighting his persistent practices. Though quick, brutal, barbaric and verily blind in execution, his stubbornness to act first and reason later, though is not the take away here, shows the forgiving nature of the spectrum of people that the saintly list accommodates.



## Background

Karuvoor once had the good distinction of being the Chola capital. The saint, Eripathar hailed from this region and was known for carrying around an axe. One that saw the blood of those who were not zealous of puristic ritualism. The axe had made a notable reputation for punishing everybody who would cause harm to devotees and their practices.

With an illustrious lineup of saints who are quite the violent vigilantes, it is here that one should make a note to themselves that the Periya puranam does not applaud these acts and practices with merit or celebration. Rather, through the interventions at the precepts of each of these horrid episodes, and the mixed contradictory ideologies of the 63, the notion here is to invoke inclusivity, forgiveness and opportunity/access to salvation - at any point in life, as opposed to the popular trend of casting one out.

## The Test

On a very auspicious Navami, a mature devotee named Sivakamiandar was on a morning trot with his basket of auspicious ritual flowers. His care, effort, and the op-

portunity to perform the respective ritual that day was robbed off him when the Royal elephant pulled away and tossed the basket from behind him. The old devotee wept at his lost efforts and the irrecoverable auspicious time.

Witnessing this, Eripather slaughters the trunk which tossed the flowers off the elephant in a fit of impulsive rage. For all the public noticed, someone had publicly



murdered the Royal elephant, apparently unprovoked. The confused accounts reached the king - Puhazh Cholan. Upon arriving at the scene the king understood that the assailant was a Sivanadiyar, and reasoned that Adiyarhal like the king himself would not initiate such violence unless rightly provoked, and took responsibility for the actions of the elephant, so much so that he argued that the saint take his life too, but with his very own royal sword instead of the saintly axe, as he did not deserve its righteous strike.

The Saint, not having expected such a smooth resolution and a display of understanding from the king, realised the gravitas of the heinous act that he had just committed and attempted to seek atonement by sacrificing himself with the royal sword.

The divine word broke from the eight directions and proclaimed that it had all been a test. For the display of faith, courage, understanding and accountability, all that were affected were resurrected and blessed. Both Eripathar and the king ascended the royal elephant and rode away to their duties.

## Significance through time.

The temple city of Karur Pasupateeswarar Temple continues to honour him. His story is read during temple festivals and commemorated in the monthly rituals dedicated to the 63 Nayanmars. Saivites commemorate the saint, and the values made apparent, on his Guru Poosai day - Moolam star of Tamil Margazhi.

On a streak of more bloodshed and goriness, the series will explore topics of self worth, sacrifice, purity, rage and more in the upcoming issues before moving on to a lighter and calmer theme .

# Sydney Murgan Sekkilar Festival




Sekkilar, the revered poet who authored the Periya Puranam, gifted Tamil literature with more than just a historical record it is a timeless testament to faith and devotion that continues to inspire across centuries. Composed in the 12th century, the Periya Puranam immortalizes the lives and spiritual journeys of the 63 steadfast Saivite saints, known as the Nayanmars, offering profound insight into the ideals of Tamil Saiva tradition.

The Sekkilar Festival was celebrated on 8th June 2025 at the Sydney Murugan Temple, marking its 17th consecutive year. This annual celebration was a joint initiative by The Saiva Manram and World Saiva Peravai Australia. The event actively engaged students and youth through a variety of programs and activities.

# Tamil Literature: The Soul of Our Culture



Tholkappiyar



Siva P.Ketharan
English Editor –
Thennadu

Tamil culture is incredibly rich, and its literature is a priceless treasure that reflects our profound heritage and intellectual depth. Tamil literature is vast and carries thousands of years worth of knowledge and values that we still employ today. Our literature can be seen as the blood that pumps through our body, carrying the essence of our identity, history and values to sustain our life and the soul of our culture. Throughout history, our very talented writers and poets have crafted several texts that have shaped our culture and philosophy. Let's go through some of the most influential texts of Tamil history.

## THOLKAAPIYAM

Tamil literature's oldest text that we have uncovered and studied properly is the Tholkappiyam written by Tholkappiyar which dates back to around 700BC. It is important to note that there are older texts. Tholkappiyar references them in the Tholkappiyam but we have been unable to recover them. The Tholkappiyam incorporates a systematic analysis of the structure and rules of the Tamil language covering a range of areas such as phonetics (ezhuthu), morphology, syntax, and semantics (sol). The Tholkappiyam is a testament to the ancient depth of Tamil, with its extensive knowledge and representation of sophisticated grammar and structure, ultimately indicating that our language was spoken and used long before its formal documentation. The Tholkappiyam is divided into three main books or Athikaarams. The Ezhuththadhikaaram focuses on the phonology of Tamil, including a scientific description of its sounds, particularly in the chapter Pirappiyal, which articulates Tamil's letters. Further Solladhikaaram deals with Tamil's morphology, classifying words into four categories: Peyar (Noun), Vinai (Verb), Idai (Particles), and Uri (Adverbs/Adjectives). Finally, it also contains the Poruladhikaaram, which is unique to Tamil, this book addresses literary content, categorising themes into Agam (love and relationships) and Puram (war, valour, and heroism). The Tholkaapiyam is indeed an extraordinary piece of literature and for Tamil heritage to have a text so complex and intricate in the language emphasises its greatness.

With the dawn of the great Sangam age, Tamil literature flourished and gave rise to a collection of eighteen intricate texts, known as the Patinenmelkanakku (பதினெண்மேல்கணக்கு) which is made up of Eight Anthologies (Ettuthokai) and the Ten Idylls (Pattupattu). These texts, regarded as the oldest surviving Tamil poetry, are considered a cornerstone of Sangam Literature, which was composed between approximately 100 BCE and



200 CE. The most notable of these texts are the Tirumurukatruppatai and Paripadal.

### Tirumurukatruppatai

The Tirumurukatruppatai (Tamil: திருமுருகாற்றுப் படை, ) is an important work in Tamil literature, attributed to the poet Nakkiranar, one of the most celebrated poets of the Sangam era and he is believed to have composed this around 2nd to 4th century CE. This text is entirely dedicated to praising the Murugan, a core deity in Saiva Tamil beliefs. It describes the beauty and the warrior nature of Murugan, his six sacred shrine regions whilst also going into depth about his characteristics.

### Paripaadal

The Paripadal (Tamil: பரிபாடல்), meaning the anthology of poems in the paripadal metre, is a classical Tamil literary work. It is traditionally regarded as the fifth of the Eight Anthologies (Ettuthokai) in Sangam literature. The Paripadal is a key anthology of Tamil devotional poetry, originally containing 70 poems, of which 24 have survived. These poems, compiled by 13 poets, are primarily dedicated to three deities: Thirumal, Murugan, and the river goddess Vaikai. It is important to note that the Paripadal mentions various temples and shrines that emphasise an established religious infrastructure dedicated to deities like Thirumal and Murugan, which suggests the Ancient Temple Culture of the Tamils. The collection is considered to be from the late Sangam period (approximately 3rd century CE).

As the Great Sangam age progressed and came to its culmination, The Eighteen Lesser Texts or "Patinenkilkanakku" (Tamil: பதினெண்கீழ் கணக்கு) formed an essential part of Tamil literature, showcasing the richness and depth of ethics and practical wisdom of the time. These texts focus on concise aphorisms and teachings, often addressing everyday life and morality, essentially teaching individuals how to be better people. Comprising works such as Naladiyar, Inna Narpathu, Iniyavai Narpathu, and others, these texts reflect Tamil society's values and the importance they gave to virtues such as discipline, hospitality and virtuous living. The most notable of these texts is the Great Thirukkural.

# Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva P.Abiram SG

Thirugnanasampanthar Swamikal merged back into the lotus feet of Lord Siva on the auspicious day of Vaikasi Mulam in the Tamil calendar. This year, Vaikasi Mulam falls on Thursday, 12th June 2025.

Thirugnanasampanthar was a revered Saiva saint and poet who lived in 7th century CE. He is remembered as one of the most prominent among the 63 Nayanmars (the great Tamil saints devoted to Lord Sivan). His devotional songs were later compiled into the first three volumes of the Thirumurai, a sacred text central to Saiva Siddhanta philosophy. His collected hymns are known as the Thirukkadaikappu.

Sampanthar was born in the town of Sirkali to Sivapatha Viruthayar and his wife Pakavathi Ammal. From a very young age, he showed a strong bond with his father and a deep devotion to Sivan. When he was around three years old, he insisted on joining his father on a visit to the temple. His father, as part of his daily routine, took a holy dip in the temple's sacred pond. He asked little Sampanthar to wait on the steps while he bathed.



Sampanthar sat quietly and watched his father go under the water again and again. But when his father stayed under a little longer, the child panicked, unable to see him. In distress, he cried out, "Amma Appa!"

Hearing his heartfelt cry, Lord Sivan and Goddess Parvati appeared before him in divine form. Moved by his innocence, the goddess lovingly fed him milk from a golden cup.

Moments later, Sivapatha Viruthayar emerged from the pond and was shocked to see milk on his son's lips. Alarmed, he scolded the boy: "Who gave you this milk? Why did you drink it from a stranger?" Sampanthar, still in a blissful daze, didn't respond. Frustrated, his father picked up a small stick and said, "Tell me now! Who gave you the milk?"

**Sampanthar, pointing upwards, began singing a powerful verse**
**Thodudaiya seviyan vidai eriyoor thuuven mathi soodi**
**Kaadudaiya sudalai podi poosi enn ullam kavar kalvan**
**Edudaiya malaraan unai naat paninthu eththa arul seitha**
**Peedudaiya piramaa puram meeviya penman evan andrai**

In English this means, the God who wears earrings and rides on a bull, wears the moon on his head like a crown. He smeared himself with the ash in the cremation ground, he has stolen my mind and bestowed his grace on Peruman who is seated on a lotus. He is the one who resides gladly in Piramapuram possessing greatness.

Everyone around was stunned, not just by the miracle, but by the depth, beauty, and spiritual strength of the young boy's song. From that day on, people recognised the divine spark in him. He was named Gnanasampanthar, meaning "Sampanthar endowed with divine wisdom." Out of deep respect, he became known as Thirugnanasampanthar.

He went on to compose thousands of devotional hymns known as the Thevarams, praising the greatness and compassion of Lord Sivan. Though many of these works have been lost over time and about 400 of these verses survive today.

# திருக்கேதீச்சர வருடாந்த பெருந்திருவிழா–ஐந்து தேர்கள் வீதியுலா



மன்னார் மாவட்ட மாதோட்ட நன்னகர் அருள்மிகு கௌரியம்மை உடனுறை திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில் வருடாந்த பெருந்திருவிழாவானது, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 வைகாசித் திங்கள் 17ம் நாள் (2025-05-31) சனிக்கிழமை தொடக்கம் 2025-06-09 திங்கட்கிழமை வரை, பத்து நாள் திருவிழாவாக சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.

இத்திருவிழாவில், ஈழத்தின் தேவாரப் பாடல்பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீச்சரத்தின் தேர்த்திருவிழாவானது ஐந்தேர் வீதி உலாவுடன் கூடிய சிறப்பு மிக்கதாகும். இம்முறை தேர் திருவிழாவானதுகடந்தவைகாசித் திங்கள் 25 ஆம் நாள் (08-06-2025) அன்று திருவருளுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது. அந்நாளில் அடியார் பெருமக்கள் பலரும் கலந்து கொண்டு, எம்பெருமானின் ஐந்தேர் வீதிஉலா அருட்காட்சியைக் கண்டு திருவருள் பெற்றிருந்தனர்.

திருச்சிற்றம்பலம்

# தென்னாடு வாசிப்போம் பரிசில்கள் பெறுவோம்

மாணவர்களின் சைவ சமய அறிவினை மேம்படுத்தவும், தமிழர் வழிபாட்டு விழுமியங்களை வெளிக்கொண்டு வரவும், ஒவ்வொரு நிறைமதிக்கும், கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால் வெளியிடப்படும் தென்னாடு திங்கள் இதழினை கருத்துடன் வாசிக்கும் பழக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் இந்த பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

பாடசாலை மாணவர்கள், பின்வரும் கேள்விகளுக்கு, சித்திரைத் திங்கள் 57 ஆவது தென்னாடு திங்கள் இதழில் இருந்து பதில்களை எழுதி, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்கு விபரத்தையும் அனுப்பி வைக்கவும். வெற்றியாளர்களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசில் வழங்கப்படும்.

**கேள்விகள்:**

1. **“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு” என்பது எத்தனையாவது குறள் ?**
2. **நல்லை ஆதீனத்தின் முதலாவது குருமகா சன்னிதானம் யார்?**
3. **சோமேசுவரானந்தகிரி எனும் சுவாமியால் எவ்விடங்களில் மடங்கள் அமைக்கப்பட்டது?**
4. **“தம்மையே புகழ்ந்து...” எந்த தலத்தில் பாடப்பட்டது?**
5. **தென்னாடு சைவ மாணவர் சபையால், வடமாகாண சபையில் அமைக்கப்பெற்ற திருக்கோயில் இறைவன் பெயர் என்ன?**
6. **செங்கணான் பிறப்பைச் சிறப்பிக்க பாடிய பதிகம் யாது?**
7. **சுந்தரமூர்த்தி சுவாமிகள் அமர்நீதி நாயனாரை எவ்வாறு சிறப்பித்தார்?**
8. **சுந்தரர் மழை வேண்டி பதிகம் பாடிய தலம் எது?**
9. **திருநாளைப் போவார் நாயனார் எந்த ஊரைச் சேர்ந்தவர்?**
10. **“மற்றுநீ வன்மைபேசி ........................................ என்னும் நாமம் பெற்றனை” இடைவெளி நிரப்புக.**

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**

**ஆனித் திங்கள் 16 ஆம் நாள் (30-06-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# Fourth Doubt (Refuting the subtle deha-aanmavaada)

**Last month Summary :**

Sivakan and his friends were discussing the nature of the soul when one friend asked if the sensory organs such as the eyes, ears, and none could be considered the soul, since they help us gain knowledge. Sivakan clarified that while the sensory organs detect stimuli like sound or sight, they are merely instruments. Each organ has a limited function and cannot perceive beyond its specific sense. The true knower, he explained, is something subtler and more intelligent than the senses. That conscious, intelligent entity which uses these instruments to perceive the world is the soul, separate from the sensory organs.



One of our friends suggested that maybe the subtle body, the part of us that works during dreams, is actually the soul. After all, we've all had dreams. When we're asleep, our physical senses, like our eyes and ears don't work, but in our dreams, we still seem to see, hear and experience things. So, could that subtle body actually be the soul? That was his question.

Let's think about what actually happens in dreams. Sometimes, after waking up, we can remember our dreams completely. Other times, it's fuzzy or we forget most of it. If the subtle body in our dreams were really the soul, then it should also be active during our waking hours. And if that were the case, we'd remember every dream exactly as it happened, no confusion, no forgetting. But that's clearly not how it works in everyday life.

So what's really going on? The subtle body only functions because there's something behind it, some intelligence driving it. That same intelligence also drives our physical body when we're awake. But the number of tools or senses we have to experience things while awake is greater than in dreams. That's why we only remember parts of dreams when we wake up.

In short, the awareness or intelligence that knows what's happening whether in dreams or when we're awake ,is something separate from both the physical and subtle bodies. It's this intelligent presence, the soul, that observes both worlds. So, through this, we can see that the soul isn't the subtle body, it's something beyond it. That cleared up our friend's doubt.

**Saiva Philosophy Reference:**

The takeaway of this discussion is that the soul is not the subtle body, just as it is not the physical body. Though the subtle body experiences dreams, it is not the source of awareness itself. The soul is the intelligent being that remains distinct from both the physical and subtle bodies. It is this soul that illuminates all experiences, in both waking and dreaming states, proving its existence as a conscious, independent reality beyond all bodily layers.

# தென்னாட்டு நிகழ்வுகள்



வைகாசித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் (25-05-2025)



ஒசுத்திரேலியா சிட்னி பரமட்டாவில் செந்தமிழில் விநாயகர் வேள்வி வழிபாடுகள் (11-05-2025)





ஒசுத்திரேலியா சிட்னியில் செந்தமிழில் புதுமனைப் புகுவிழா வழிபாடுகள் (06-06-2025)



சித்திரை நிறைமதி தென்புலத்தார் வழிபாடுகள் (12-05-2025)

# தென்னாட்டு நிகழ்வுகள்




சித்திரைத் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (12-05 -2025)


தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஐம்பத்து எட்டாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 விடை நல்லோரை வைகாசித் திங்கள் 27ம் நாள் நிறைமதி அன்று (10 -06 -2025 செவ்வாய்க்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிற மொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.



தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org